www.tamilarangam.net

# நாங்கள்




GUYS மாணவர் இளைஞர் பொதுமன்றம்

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஈழமண்ணில் போரடி வாழும் மாணவர் இளைஞர் பொதுமன்றத் தோழர்களால் 1-4-1985ல் வெளியிடப்பட்ட "நாங்கள்"-3 இதழ்

வெளிநாடுகளிலுள்ள தோழர் கட்காய் சில மாற்றங்களுடன் மறுமதிப்புச் செய்யப்பட்டு 1-5-85ல் வெளியிடப்படுகின்றது.

**"நாங்கள்"**

"இது ஒரு
மாணவர் சஞ்சிகை"

தொடர்புகளுக்கு

அ. கவீந்திரன்
36, இலட்சுமி புரம்
வடபழனி
சென்னை - 600 026

மனதில் நிலை நிறுத்திக் கொள்ளுங்கள் மக்கள் தனியே ஒருவரது தலையினுள் காணப்படும் கருத்துக்களுக்காக மட்டும் போராடுவதில்லை. பொருளாய தேவைகளை நிவர்த்தி செய்யவும், அமைதியானதும் முன்னேற்ற கரமானதுமான வாழ்க்கையை நோக்கியும் அவர்களது எதிர் காலத்தை நிதர்சனமாக்கவும் அவர்களது குழந்தைகள்....................

அமில்கார் கப்ரால்



## சொல்கிறோம்

அரச கெடுபிடிகளினுல் இன்றைய, மாணவர்களின் உயிருக்கு உத்தர வாதமில்லாத வாழ்க்கை, பாடசாலை செல்லும்போது நிகழும் துப்பாக்கிச் சூட்டு சம்பவங்கள்; பாடசாலை நேரத்தில் அல்லது பரீட்சை எழுதிக் கொண்டிருக்கும்போது "பயங்கரவாதி" என்ற போர்வையில் நிகழும் கைதுகள், சித்திரவதைகள், சகோதரர்கள், பெற்றோர்கள் அல்லது உடனமைகள் ஆகியவற்றின் இழப்பினுல் ஏற்படும் கஷ்டங்கள் மனவிரக்திகள், இதனுல் பாதுகாப்பைத்தேடி அகதிகளாக சொந்த நாட்டை விட்டு படிப்பை நிறுத்தி இந்தியா செல்லும் துர்ப்பாக்கியநிலை, கல்விக் கூடங்கள் இராணுவ சித்திரவதை முகாம்களாகவும் அகதி முகாம்களாகவும் மாறும் காட்சிகள், தமிழ் பகுதிகளில் உள்ள பல பாடசாலைகள் பல வருடங்களாக அபிவிருத்தி அடையாத நிலை, ஆசிரியர் பற்றுக் குறைகள்; இலவச பாட புத்தகங்கள் இன்னும் பல பாடசாலைகளுக்கு வந்து சேராத நிலை, தேசிய பாதுகாப்பு நிதிக்கென ஆசிரியர் சம்பளத்தில் அவர்களது எவ்வித சம்மதத்தையும் பெருமல் கழிப்பதற்காக நிகழும்நடவடிக்கைகள், போன்ற நிகழ்வுகள் நிகழ்காலத்தை எச்சரித்து இன்றைய மாணவர்களின் எதிர்காலம் என்ன? என்ற கேள்வியை மாணவரிடத்தில் ஏன் முழு சமுதாயத்தையுமே எழுப்பி நிற்கிறது.

அதே நேரத்தில் விடுதலைப் போராட்டம் என்ற பெயரில் மாணவ விரோதிகளினுல் பாடசாலைகளில் நிகழும் உபகரண கொள்ளைகள் பாடசாலை அபிவிருத்திக்கென ஒதுக்கிய நிதியை ஆசிரியர் கெஞ்சிக் கேட்டும் கொள்ளை அடித்து சென்ற காட்சி, ஆசிரியர் சம்பளப்பணக் கொள்ளைகள். மாண்வரின் படிப்பை இடைநடுவில் குழப்புவதன் மூலம் தனிப்பட்ட சில சொந்த அபிலாசைகளை நிறைவேற்றலாம் என்ற போர்வையில் நிகழும் பரீட்சை குழப்பும் நடவடிக்கைகள் போன்றன இன்று மாணவர்களுக்கு ந்தேகத்தையும் மனவிரக்தியையும் ஏற்படுத்தி நிற்கின்றது. இதனுல் மாணவர்கள் கற்பதற்காக போராட வேண்டிய சூழ்நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

இதன் வெளிப்பாடே இன்று பல மாணவ அமைப்புகளினுல் பாடசாலைகளில் நடந்த கொள்ளைகளையும், பரீட்சையை குழப்பியமையும் கண்டித்தும், அரச பயங்கரவாதத்தை ஆட்சேபித்தும் வெளியிடப்பட்ட துண்டு பிரசுரங்களும் ,ஊர்வலங்களுமாகும்.

சில வசதி படைத்த மாணவர்கள் படிப்பைத் தொடர்வதற்காக வெளிநாடு செல்கிருர்கள். இவர்கள் ஒன்றை மட்டும் மனதில் கொள்ள வேண்டும். அதாவது நாம் படிக்கும் கல்வி தனது உயர்வசதிக்ககாவும்

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சுகபோக வாழ்க்கைக்குமாக அல்லாமல் இந்த சமூகத்தின் விடிவுக்காகவே பயன்படவேண்டும். இதே நேரத்தில் வேறுசிலர் பாதுகாப்பு தேடி சில வருடங்கள் வெளிநாட்டில் இருந்து விட்டு வருவோம் என்ற நோக்கத்தோடு நாட்டை விட்டு முடிச்சுக் கட்டுகிறார்கள். இவர்களுக்கு நாம் சொல்லிக் கொள்வது இதுதான். இன்று நீங்கள் எவ்வாறு இங்கு தேவைப்படவில்லையோ அதுபோலவே அமையப்போகும் ஈழத்திற்கும் தேவைப்படமாட்டீர்கள் என்பதே.

மாணவர்களாகிய நாம் எம்மை சூழ்ந்துள்ள அடிமைச் சங்கிலியை உடைத்து நாளைய சமுதாயத்தின் சுதந்திர சிற்பிகளாக மாறுவதற்கு ஒவ்வொருவரும் தமதுபங்களிப்பைச் செய்தல் வேண்டும். இதற்கு நாம் உண்மையான புரட்சிகர சக்திகளை இனங்கண்டு அவர்களது வழி காட்டலுக்கேற்ப எமது போராட்ட நடவடிக்கைகளை ஒருமுகப்படுத்துவதே எமது பூரண பங்களிப்பாக அமையும்.

மேலே நாங்கள் சுட்டிக்காட்டிய குழப்பமான சூழ்நிலையினை எதிர்த்து இவை தொடர்ந்து நடக்காதிருக்க என்ன செய்ய வேண்டும். இதனைச் சரியாக தீர்மானிப்பதில் மாணவர்களாகிய உங்கள் பங்கு முக்கியமானது. அரசபயங்கரவாதம் மாத்திரமன்றி எம்மைக்குழப்பி நிற்பதும் விடுதலைப் போராட்டத்தை மாசுபடுத்துவதுமான நிகழ்ச்சிகளை, துரோகிகளை இனங்கண்டு இவற்றை எமது சமூகத்திலிருந்து தூக்கியெறிதல் வேண்டும். இவ்வாறான நிகழ்ச்சிகளுக்கு ஆயுதத்தை துணைகொண்டு நிற்கும் அம்சங்களை உடனடியாக இனங்கண்டு மக்களுடன் இணைந்து தூக்கி எறிதல் வேண்டும். அதாவது எதிர்த்து போராடவேண்டிய அவசியமே எம்முன் பரந்து நிற்கின்றது இத்தீய சக்திகளை, வலுவிழக்கச் செய்ய நாம் அணிதிரள்வோம்.

> " அஞ்சாமை மிக்க இரண்டாம்
> தலைமுறை வெளிவரட்டும்.
> விடுதலைவேட்கை நிரம்பிய மக்கள்
> வளரட்டும்.
> எதையும் குணப்படுத்தும் அழகும்
> உறுதியுடன் பற்றிக் கொள்ளும் வலிமையும்
> நம் இரத்தத்திலும், உயிரிலும்
> விடாமல் துடிக்கட்டும்.
> **மனிதன் எனும் ஓர் இனம் எழுந்துவந்து**
> **அதிகாரத்தைக் கைப்பற்றட்டும்."**
>
> *--மார்கரேட் வாக்கர்.*





**மாணவர்களும்**

ஒரு இனத்தின் சமுதாயத்தின் எதிர்காலம் அந்த இனம் சமுதாயம் கடந்த காலத்தில் கட்டிக் காத்துவந்த பரம்பரை பாரம்பரியத்தை எதிர் காலத்திலும் அதன் அடிச்சுவடுகள் அழிந்து போகாவண்ணமும் முன்னேறும் வண்ணமும் கட்டிக்காத்துக் கொள்ளும் பொறுப்பு வரலாற்றுச் சந்ததி தொடர்பின் இணைப்பும் பிணைப்புமான இளம் சமுதாயத்தினதே. இந்த இளம் சமுதாயத்தில் மாணவரின் அங்கமும் பங்கும் முக்கியமானது.

*ஆங்கிலேயர் கல்வியும்*
*அதனால் ஏற்பட்ட பாதிப்பும்*

ஒரு இனத்திற்கு வாய்க்கும் கல்வித்திட்ட வசதிக்கேற்ப அந்த இனத்தின் மாணவ சமுதாயம் தமக்கும் தமது இனத்திற்கும் உகந்த கல்வியைப் பெற்று அறிவியலை வளர்ப்பதோடு அதன் அடிப்படையிலான சமூக பொருளியலையும் கலை கலாச்சார ரீதியிலான அரசியலையும் வளர்த்துக் கொள்கின்றது. இந்த அடிப்படையில் பார்க்கும் போது அந்நியர் ஆட்சியில் கொடுக்கப்பட்ட கல்வி வாய்ப்பின்படி ஆளும் ஆட்சியினரை அடிவருடி வாழும் வர்க்கத்தை உருவாக்கக் கூடியதாய் இருந்தது அதாவது யாழ்ப்பாணம் பகுதிகளில் மிஷன்களால் உருவாக்கப்பட்ட பாடசாலைகளில் ஏற்படுத்தப்பட்ட போலிக் கட்டுப்பாடுகள் கைகட்டி வாய்பொத்தி ஆட்சியினருக்கு அடிமைத் தொழில் செய்யும் மனோநிலையையே தோற்றுவித்தது. இந்தக் கல்வி எமது இயற்கையுடன் ஒட்டியதாய் இருக்கவில்லை. இதன் பிரதிபலிப்பே இன்று சிங்கள சோவனிச அரசின் இன ஒடுக்குமுறை இவ்வளவு கொடூரமாகியும் சிலர் போராட்டத்தில் இருந்து ஒதுங்குவதையும், வேறுசிலர் குறிப்பாக கல்விமான்கள், ஆசிரியர்கள், வைத்தியர்கள் இன்றைய ஈழவரின் இக்கட்டான சூழ்நிலையில் களத்தில் நின்று தமது உயிரைப் பணயம் வைத்து சேவை செய்ய வேண்டியர்கள், இன்றைய போராட்ட சூழ் நிலைகளை ஜீரணிக்க முடியாமல் தமது **சொந்த மண்ணைவிட்டு வேறுநாடுகளுக்கு தப்பி ஓடுவதையும் காணலாம்.**

இங்கு மற்றுமொரு உண்மையையும் உணர வேண்டும். அதாவது உயர்கல்வி நமது **மக்களின் சமூக பொருளியல் நிலையையும் அபிவிருத்தி செய்யக்கூடியதாகவும் இருக்கவேண்டும்.** இந்த வகையில் கடந்த காலங்களில் மாணவர்கள் இலங்கையிலும் வெளிநாடுகளிலும் பெற்றகல்வி எந்த வகையிலும் ஈழத்தின் ஏன் ஈழவரின் சமுகப் பொருளியல் மாற்றத்தை மேற்கொள்ளக்கூடிய விதத்தில் அமையவில்லை. இதன் பிரதி பலிப்பை இன்று நிதர்சனமாகவே காணக்கூடியதாய் இருக்கிறது. உதாரணத்



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

திற்கு வெளிநாடுகளுக்கு முக்கியமாக இங்கிலாந்து சென்று படித்த
மாணவர்கள் அங்கு ஏற்பட்ட வெளிநாட்டு மோகத்தினுல் அந்த நாட்டி
லேயும், புதிய தொழில்வாய்ப்பு என்றபெயரில் மத்தியகிழக்கு, ஆபிரிக்கா
நாடுகளிலும் தொழில் செய்கிருர்கள். இதனுலேயே ''மார்டின் வூல
கோட்'' என்ற கார்டியன் ஆங்கிலப்பத்திரிகைநிருபர் ''கல்வித் திறமைகளை
ஏற்றுமதி செய்யும் சமுதா மே தமிழ் சமுதாயம்'' என்று எழுதியுள்ளார்,
இதையிட்டு பெருமைப்படும் அதே நேரத்தில் ஈழவர்கள் தமது பாரம்பரிய
பிரதேசத்தை அபிவிருத்தி செய்யாமல், வளப்படுத்தாமல் விட்டதால்.
இன்று திட்டமிட்ட சிங்களக் குடியேற்றத்தினுல் தமது பாரம்பரிய பிர
தேசங்களையே இழந்து வருகின்றனர். மேலும் நாளாவட்டம் இனஒடுக்
கப், கட்டாய நாடுகடத்தல் என்பவற்ருல் பாதிக்கப்பட்டுவரும்
இலங்கைவாழ் தமிழர்களின் சமூகப் பொருளியல் சீர்குலைவதையும், அத
ணுல் உருவாகிவரும் அரசியல் இழப்புக்களையும் கண்டு கண்மூடித்தனமாக
இருந்துவிட்முடியாது.

*இன ஒடுக்கல் கொள்கையும்,*
*இதனுல் கல்வியில் ஏற்பட்ட பாதிப்பும்*

1965ம் ஆண்டு பண்டாரநாயக்கா அரசாங்கம் அமுல் நடத்திய
தனிசிங்களச் சட்டம் முதல் ஆரம்பித்து பின் 1970ம் ஆண்டு முதல்
தரப்படுத்தல் நியதியின் மூலம் இலங்கை வாழ் தமிழ் பேசும் மாண
வர்கள் உயர்கல்வி பெறும் வாய்ப்பை படிப்படியாக இழந்து வந்தனர்.
மேலும் இன்று சிங்கள சோவனிச அரசின் இன ஒடுக்குமுறையின்
உச்சநிலையில் பல கல்விமான்களை உருவாக்கிய கல்விக்கூடங்களும்,
நூல்நிலையங்களும் இராணுவத்தினரால் திட்டமிட்டு எரித்து நாசமாக்கப்
பட்டு வருகின்றது. நாளாந்தம் பல மாணவர்கள் கைதுசெய்யப்பட்டும்
கொலைசெய்யப்பட்டும் வருகிருர்கள். இதன் காரணமாக பல மாணவர்
கள் பாதுகாப்புத்தேடி வெளிநாடுகளுக்கு ஓடும் சூழ்நிலை உருவாகி
உள்ளது. இதனுல் ஈழம் தனது சமூகப் பொருளியலை அபிவிருத்தி செய்
யக்கூடிய இளம் சந்ததியை இழந்து வருகிறது. மேலும் சிங்கள விஸ்தரிப்பு
வாதத்தின் விஸ்வரூபத்தை பாடசாலைப் புத்தகங்களிலும் காணக்கூடிய
தாக இருக்கிறது. இன்று அரசாங்கம் வழங்கும் பாடப்புத்தகங்களில்
வரலாறுகள் திரித்துக் கூறப்படுகிறது. அதாவது இந்நாட்டின் பூர்வீகக்
குடிகள் சிங்கள மக்களே என்றும், தமிழர்கள் வந்தேறு குடிகள் என்றும்
போதிக்கப்படுகின்றது. இதனுல் சிங்கள மாணவர்களுக்கு இனவாதம்
ஊட்டப்படுகிறது. அதே நேரத்தில் இது ஈழ மாணவர்களிடத்தே
போராட்ட உணர்வுகள் மழுங்கடித்து ஈழப் போராட்டம் நியாய
மற்ற ஒன்று என பிரச்சாரம் செய்வதுடன் இவர்களை தமது சொந்த மண்
மீது எந்தவித வாசனையும் இல்லாத நாடோடிகளாக மாற்றுகிறது.

*வர்க்க முரண்பாடு:*

தரப்படுத்தலின் பின்பே வடக்கு, கிழக்கு மாணவர்கள் உயர்கல்வி



பெறும் வாய்ப்பை இழந்த போதிலும் இந்த வாய்ப்பை மலையகப்பகுதிக
ளில் உயர்மட்டத்து வசதிவாய்ப்பு அல்லாதோர் என்றே இழந்தவராய்
இருந்தார்கள். இந்தப் போலிசமுதாய அமைப்பை பேணிப்பாதுகாப்ப
தற்கு கல்வியறிவில்லாத, இழப்பதற்கு ஒன்றும் இல்லாத அதே நேரத்
தில் தனது உழைப்புச் சக்தி ஒன்றை மட்டும் நம்பியே எந்த நேரத்திலும்
முதலாளிகளுக்கு உழைப்பதற்காக ஒரு வர்க்கம் தயாராக இருக்கவேண்
டும், இதனுலேயே நாட்டின் மொத்த வருமானத்தில் 60 சதவீதத்தை
ஈட்டிக்கொடுக்கும் மலையக பாடசாலைகள் எந்தவித வசதியும் அபிவிருத்தி
யும் இல்லாது இருக்கிறது, மேலும் இவர்களிடத்தில் ஏற்பட்டிருக்கும்
பொருளாதாரச் சுமைகள் மலையக மாணவர்களையும், இவர்கள் தம் பெற்
ருேர்களையும் கையொப்பம் வைப்பதற்கு மாத்திரம் தெரியும் அளவுக்கு
படிப்பதற்கே பணிக்கிறது. அதே நேரத்தில் பல்கலைக்கழகப் படிப்பின்
மூலம் சமுதாயத்தின் மேல்மட்டத்தை எட்டிப்பிடிக்கலாம் என நினைத்து
தனது சொத்து பத்து எல்லாவற்றையும் பணயம் வைத்து கல்விகற்கும்
நடுத்தர வர்க்கம். சிறுவயதிலேயே படிப்பை நிறுத்திவிட்டு முதலாளி
களுக்காக உழைப்பவர்கள் ஆயிரம் ஆயிரம் இளைஞர்கள். எத்தவித வச
தியும் இல்லாத கிராமப்புற பாடசாலைகள் வசதி படைத்தவர்கள் படிப்
பதற்காக கட்டப்பட்ட நகர்ப்புற பாடசாலைகள் இவையே இன்றைய
கல்வி அமைப்பிலுள்ள வர்க்க குணும்சங்களாகும்.

**கல்வி என்பது இன்று ஒரு சிலரின் தனிச்சொத்தாக மாறியுள்ளது.**
''சொந்தம் என்பது உறுதியடா, இது சோசலிசத்தின் சுருதியடா''
என்பதற்கேற்ப அமையப்போகும் ஈழவரின் புதிய சமுதாயத்தில் **கல்வி**
**என்பது பொதுச் சொத்தாக மாற்றப்படவேண்டும்.** இதற்கு ஈழமாண
வர்கள் தம்மாலான பங்களிப்பை ஆற்றவேண்டும்.

இன்று பொதுவாக மாணவர்கள் ஏட்டுக் கல்வியின் மூலம் கிணற்றுத்
தவளைகளாகவே உள்ளனர். மாணவர்கள் பரீட்சைக்காக மட்டுமே
படிக்கும் நிலையில் உள்ளனர். இந்நிலைமாறி நாம் படிக்கும் கல்வி எமது
புதிய சமுதாய மாற்றத்திற்கு பயன்பட வேண்டும் அதாவது **கல்வி**
**என்பது கற்பவனுக்கு என்ற நிலை மாறி கல்வி சமுதாயத்திற்கே என்ற நிலை**
**தோன்ற வேண்டும்.** அதே நேரத்தில் இன்றைய நெருக்கடிகள் ஒருசில
மாணவரிடத்தே முற்போக்கு சிந்தனைகளைத் தோற்றுவித்துள்ளது என்ப
தனை யாரும் மறுக்கமுடியாது. மாணவ முன்னேடிகள் என்று உள்ளவர்
கள் ஈழத்தின் வளங்கள், பொருளாதாரத் தன்மை, இலங்கையின்
மொத்தப் பொருள் உற்பத்தியில் ஈழம் வகிக்கும் பங்கு, சர்வதேசநிலை,
எமது சமுதாயத்திலுள்ள சீர்கேடுகள் என்பவற்றை ஆய்வு செய்து மாண
வர்கள், ஈழவர்கள் மத்தியில் கொண்டுவருதல் வேண்டும். இன்றைய
மாணவர் அமைப்புகள் இயக்கங்களுக்கு ஆள் பிடித்தல் உடன்மட்டும்
நின்று விடாமல், முற்போக்கு எண்ணம் கொண்ட புத்தி ஜீவிகளை
உருவாக்குவதில் ஈடுபட வேண்டும்.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## இயக்கப் பொடியள் ○○

கடந்த சில நாட்களுக்கு முதல் பிரதான வீதியாக இல்லாத ஒரு வீதியில் நடந்து போய்க் கொண்டிருந்தேன். அந்த வீதியில் சிறுவர்கள் அதிகமாகப் பயிலும் பாடசாலை ஒன்றிருக்கின்றது. 'அதைத்தவிர மகளிர் பாடசாலை ஒன்றும் இருக்கிறது. திடீரென மிகவும் உயர்ந்த வேகத்துடனும் இரைச்சலுடனும் இரண்டு மோட்டார் சைக்கிள்களில் நான்கு இளைஞர்கள் அந்த வீதியால் சென்று மறைந்தார்கள். பாடசாலை விட்டிருந்த நேரமாதலில் சிறுவர்கள், பெண்கள் இப்படி நெருக்கடியும் ஒருவகை பரபரப்பும் நிலவிய சூழலில் இந்த நான்கு இளைஞர்களும் பீதியையும் வேறு சேர்த்தார்கள்.

அவர்களுடைய வேகத்திற்குப் பயந்துபோய் கரையொதுங்கிய பலரில் நானும் ஒருவன் என்றால் அது மிகையாகாது.

**△யார் இந்த இளைஞர்கள் ?△**

''இயக்கப் பெடியள்'' என்று அப்போது பேசிக்கொண்டார்கள். சில வாரங்களுக்கு முன்பு கடலோரமாக உள்ள கிராமம் ஒன்றில் வேறுசில இளைஞர்கள் துப்பாக்கி ஏந்தியபடி சென்று நிதி வசூலிப்பதில் ஈடுபட்டார்கள், அவர்கள் நடந்து கொண்ட முறை மக்களுக்கு ஆத்திரமூட்டுவதாகவும் மக்களுடைய நம்பிக்கையைச் சிதைப்பதாகவும் இருந்தது. அந்த இளைஞர்களை மக்கள் எதிர்த்து அவர்களைப் பிடித்தபோது அவர்களிடம் இருந்தது துப்பாக்கி அல்லவென்றும் துப்பாக்கிப்போலப் பாவனைக்குப் பயன்பட்டது ஒரு மோட்டர் சைக்கிளின் பழைய Silencer Pipe என்ற பேருண்மை வெளிப்பட்டது.

மறுபடியும் யார் இந்த இளைஞர்கள் ? என்று கேள்வி எழுப்பப்பட்டபோது ஆசுவாசத்துடன் ''இயக்கப் பொடியள்'' என்று பேசிக்கொள்ளப் பட்டது.

தினமும் பல்வேறு இடங்களில் அலைந்து திரிந்து பல்வேறுபட்ட மக்களோடு பழகநேர்வதில் இப்படியான சம்பவங்களை நிறைய எழுதிக் கொண்டே போகலாம். ஆனால் அது என்னுடைய நோக்கம் அல்ல. இத்தகைய சம்பவங்களின், பின்னால் தொழிற்படும் இளைஞர்களின் மனோ நிலையே இந்தக் கட்டுரையை எழுத என்னைத் தூண்டுகிறது.

தேசிய விடுதலைப் போராட்டம் என்பது ஆயுதந்தாங்கிய யுத்தமாக வெளிப்படுத்தப்பட்ட போதிலிருந்து ஆயுதந் தாங்கியவர்களின் முக்கியத்துவம் அளவுகடந்து பெருகியமையே இதற்குறிய பிரதான காரணம் என்று தோன்றுகிறது.



எந்த ஒரு சூழலிலும் அரசியலுக்கு கீழ்ப்பட்டதாகவே ஆயுதம் அமைய வேண்டும் என்ற அடிப்படை உண்மை தலைகீழாக்கப் படுவதாலேயே இத்தகைய அனர்த்தங்களை நாம் காண நேர்கிறது.

மத்திய தர வர்க்க இளைஞர்களை அளவு கணக்கற்று ஆயுதக்கவர்ச்சியையும் வீர சாகஸசித்து விளையாட்டுகளையும் காட்டி ஒன்று சேர்த்து இயகம் உருவாக்குபவர்களுக்கு இது தெரியாது. 'இயக்கப் பெடியள்' என்பதை ஒரு தகுதியாகவும் (Qualification) சகல அதிகாரங்களையும் வழங்கும் ஒரு நவீன வேலைவாய்ப்பு வங்கி எனவும் கொள்ளும் இளைஞர்கள் எண்ணிக்கையில் அதிகரிப்பது எமது இன்றைய துர்பாக்கிய நிலையாகும்.

இன்றைய சூழல் இளைஞர்கள் அதாவது பொடியள்(ஆங்கிலத்தை இடையிடை பாவிப்பவர்கள் வாயில்(boys)என்ற ஒரு புதிய அடுக்கை உருவாக்கியிருக்கிறது. போல், எம், ஸ்வீஸி எனும் (paul M Sweezy)மாக்சிஸ அறிஞர் தனது புரட்சிக்குப் பிந்திய சமுதாயம் என்னும்நூலில் புதிதாக உருவாகி வந்த ஒரு அதிகார மனோ நிலைகொண்ட குழுக்களை சுட்ட இந்த அடுக்கு என்ற சொல்லைப் பாவிக்கிறார். இக் குழுக்கள் வர்க்கமாக இன்னும் மாற்றமடையாத நிலையில் அதிகார வர்க்கம் என்ற சொற்பிரயோகத்தைப் போல் எம் ஸ்வீஸி பாவிக்க மறுத்து விடுகிறார்.

நமது சூழலில் தோன்றியிருக்கும் இளைஞர்கள் அல்லது பொடியள் என்ற அடுக்கு இன்றைக்குப் பலப்பல வழிகளிலும் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு நவீன சமூகவியல் அலகு ஆகும். இவர்களின் நடவடிக்கையில் பெருமளவு வெளிப்படுவது (Adventurism) வீரசாகச மனோ பாவம் ஆகும்.

இளைஞர்கள் என்று பொதுமைப்படுத்திச் சொல்கிறபோதும் விதிவிலக்காக அமையும் சில இயக்கங்களின் இளைஞர்களை இவ்வரையறைக்குள் அடக்க முடியாது என்பதையும் இவ்விடத்தில் குறிப்பிட்டாக வேண்டும்.

நமது சூழல் விடுதலையை நாடி நிற்கின்ற ஒன்று என்பதும், மதிப்பிட முடியாத அளவு தியாகங்களையும் இழப்புகளையும் தினமும் நாம் எதிர் கொள்கிறோம் என்பதும் சத்தியமானது. ஒரு நியாயமான காரணத்திற்காக நமது இளைஞர்கள் எல்லையற்ற தியாகங்களைப் புரியத்தயாராக உள்ளனர் என்பதை எவரும் மறுப்பதற்கில்லை.

அப்படியானால் நாம் முன்னர் குறிப்பிட்ட போக்குகள் தலைதூக்குவதற்கு என்ன காரணம்?



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

விடுதலை போராட்டத்தை, மக்களைப் பார்வையாளராகவே வைத்துக் கொண்டு இந்த ''இளைஞர் அடுக்கு'' மட்டுமே வெற்றிகரமாக நடாத்தி முடிக்க முடியும் என்ற கற்பனையும் அரசியல் தெளிவின்மையுமே காரணம் ஆகும்.

பரந்துபட்ட மக்களை நிறுவனப்படுத்தாமல் 'உண்மையான விடுதலை' என்பது சாத்தியமில்லை. மக்களை நிறுவனப்படுத்துவது அல்லது அணி திரட்டுவது என்றால் மக்கள் மத்தியில் வேலை செய்வது என்று அர்த்தம். மக்கள் மத்தியில் வேலை செய்வது என்றால் மக்களுடைய பிரச்சனைகளை விளங்கிக்கொண்டு மக்களிடம் கற்று மக்களிடமே திருப்பிக் கொடுத்தல் என்பது அர்த்தம். இத்தகைய வேலைத்திட்டத்தின் போது தான் ஒரு அமைப்பு மக்களை உண்மையாக புரிந்து கொள்ளவும், மக்களை அணி திரட்டவும் முடியும்.

வெறுமனே சோற்றுப் பொட்டலங்களை கடையில் ஓடர் பண்ணி விட்டு எடுப்பது போல வாங்குவதும், தனிநபர்களைக் கடத்திச் சென்று பணயம் கேட்பதும், நகைக் கடைகளைக் கொள்ளையடிப்பதும் எவ்வாறு மக்கள் மத்தியில் வேலை செய்வதாகும்?

இந்த அடிப்படை உண்மையைப் புரிந்து கொள்ளத் தவறி நடக்கும் இயக்கங்களை மக்கள் தூக்கியெறிவார்கள். ஏனெனில் வரலாற்றின் உந்து சக்திகள் அவர்கள்தான்.

இளைஞர் இயக்கங்கள் மக்கள் இயக்கங்களாகப் பரிமாணம் பெறுவதிலேயே விடுதலை அதன் சகல அர்த்தங்களிலும் தங்கியிருக்கிறது.

---

பாலஸ்தீன மக்களின் மொழி, அரபு. அவர்கள் அரபு பாலஸ்தீனம் கோரவில்லை. சவூதி அரேபிய மக்களின் மொழி அரபு. அங்கு அரபு சவூதி அரேபியா இல்லை. சிரிய மக்கள் அராபியர் அவர்கள் பேசும் மொழி அரபு, அங்கு அரபு சிரியா இல்லை. ஈராக்கின் மொழி அரபு அங்கு அரபு ஈராக் இல்லை. தேசிய உடைமைப்பாட்டு ரீதியில் தேசிய அந்தஸ்து கோரும்போது -மக்கள்-மொழி- அடிப்படையில் இணைந்து நாடு கோருகிறார்கள். நமது மொழி தமிழ் நம் நாடு ஈழம்

---



# மலரப்போகும் ஈழம்

## பொருளாதாரச் சுமையைத் தாங்குமா

ஈழம் என்ற வரையறைக்குட்படும் பிரதேசத்தினை நோக்கும்போது அங்கு பல்வேறுபட்ட வளங்கள் நிறைந்ததாக அமைந்துள்ளதனைக் காண முடிகின்றது. நாம் ஈழம் என்று குறிப்பிடும் பிரதேசப் பகுதிகளாகப் பருத்தித் துறைமுதல் பதுளை வரையும், மன்னார் முதல் மட்டக்களப்பு வரை பொத்துவில் உள்ளடக்கிய பிரதேசத்தையே கருதுகிறோம். இப் பிரதேசம் வளமிக்க பகுதியாகவும் செழிப்புகள் நிறைந்த பகுதியாகவும் எதிர்காலத்தில் செழித்தோங்கக் கூடிய பகுதியாகவும் காணப்படுவது குறிப்பிடத்தக்கது எனவே இவ்வாறு வளங்கள் பரந்துப்பட்டு காணப்படுகின்ற எமது பிரதேசம் எதிர் காலத்தில் மலரப் போகின்ற ஈழத்தின் பொருளாதா-ரச் சுமையைத் தீர்க்குமா என்பது பற்றியே எமது ஆய்வு அமைகின்றது. பொருளாதார அடிப்படையில் ஈழத்தின் பௌதீக நிலைமையை வைத்து ஆராய்வதே சிறப்பாக அமையும். அதாவது எதிர்காலப் பொருளாதாரம் சுபீட்ச நிலையில் காணப்படுமா அல்லது அதற்கான அந்நியச் செலாவணியை ஈட்டித்தரும் ஏற்றுமதி, சுயபூர்த்தியான உள்நாட்டு நுகர்விற்கான உற்பத்தியின் அளவு என்பவற்றின் அடிப்படையில் ஆராயப்பட்டுள்ளது.

இதுவரையில் அபிவிருத்திப் போக்கில் முன்னுரிமை பெற்ற சில அபிவிருத்தியடைந்த நாடுகளை எடுத்து நோக்கும்போது இந்நாடுகளில் வளங்கள் அதிகமாக காணப்பட்டதனை நாம் அவதானிக்கலாம். ஆனால் ஒரு சில நாடுகள் வளமற்று இருப்பினும் தொழில் நுட்பம், முதல் மனித வலு என்பவற்றை மாத்திரம் கொண்டு பெரும் அபிவிருத்தி நிலையில் உள்ளன. எனவேதான் நாம் வளம் என்னும்போது மூலவளம் மனிதவளம் இரண்டினையும் இணைத்து ஆராய முற்பட்டுள்ளோம்.

எமது ஈழப் பிரதேசங்களில் காணப்படும் வளங்கள், உபயோகப்படு-த்தக்கூடிய துறைகள் என்பவற்றை பின்வருமாறு நோக்கலாம்.

1. கடல் வளங்கள்.
2. விவசாயம்.
3. கைத்தொழில் வளங்கள் (பாரிய, சிறிய)
4. கனிப்பொருள் வளம்.
5. காட்டு வளங்கள்.
6. மிருகவளர்ப்பு.
7. துறைமுக வளங்கள்.
8. உல்லாசப் பிரயாணம்.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

9. பெருந்தோட்டப் பயிர்ச் செய்கை.
10. மனிதவலு.

இவ்வாறான பல்வேறுபட்ட வளங்களையும் இதனுடன் இணைக்கப் பட்ட சிறுவளங்களையும் எமது பிரதேசம் கொண்டிருப்பது குறிப்பிடத் தக்கது. பின்வரும் அட்டவணை எமது பிரதேசத்தின் வளங்களை விபர மாக விளக்குகின்றது.

| பிரதேசம் | வளங்களது விபரம் |
|---|---|
| யாழ்ப்பாணம் | கடல்வளம், பயிர்ச்செய்கை, கைத்தொழில் துறைமுகம், கனிவளம். |
| கிளிநொச்சி | காட்டுவளம், விலங்கு வளர்ப்பு கைத் தொழில், கனிப்பொருள் வளம், பயிர்ச் செய்கை |
| வவுனியா | பயிர்ச்செய்கை, காட்டுவளம், விலங்கு வளர்ப்பு, கைத்தொழில். |
| முல்லைத்தீவு | கடல்வளம், கனிவளம் பயிர்ச்செய்கை, விலங்கு வளர்ப்பு காட்டு வளம், கைத் தொழில். |
| மன்னார் | கடல் வளம், கனிவளம், கைத்தொழில் விலங்கு வளர்ப்பு, பயிர்ச்செய்கை |
| திருகோணமலை | கடல் வளம், பயிர்ச் செய்கை, காட்டுவளம், விலங்கு வளர்ப்பு, கைத்தொழில், உல்லாசப் பயணம் |
| மட்டக்களப்பு | கடல்வளம், கைத்தொழில், விவசாயம், காட்டு வளம், விலங்கு வளர்ப்பு, உல்லாசப்பயணம் |
| பொத்துவில் அடங்கிய பிரதேசம் | விவசாயம், கடல்வளம், கைத்தொழில், காட்டு வளம் விலங்கு வளர்ப்பு, உல்லாசப்பயணம் |
| பதுளைப் பிரதேசம் | தோட்டக்கைத்தொழில், சிறு கைத்தொழில், விலங்கு வளர்ப்பு. |



கடல்வளம்:- நாற்புறமும் கடலால் சூழப்பட்ட ஸ்ரீலங்காவின் ஒடுக்கலின் கீழ் நசுக்கப்படும் ஈழத்தின் ஒருபகுதி கரையோரப் பகுதி யாக விளங்குகின்றது. ஸ்ரீலங்காவின் முக்கியமான மீன்பிடி இடங் களாக அரசினால் கருதப்படும் பகுதிகளாக கொழும்பு, மன்னார், யாழ்ப்பாணம், சிலாவத்துறை, சிலாபம் திருகோணமலை, புத்தளம், முல்லைத்தீவு, மட்டக்களப்பு, மூதூர் என்பன விளங்குகின்றன. இவற் றுள் ஈழப்பிரதேசத்திற்கு அரசாங்கத்தினால் திட்டமிட்ட அடிப்படை யில் அபிவிருத்தி முயற்சிகள் தடுக்கப்பட்டு வருகின்றது. அதாவது மீன்பிடித்தலின் அபிவிருத்தி என்ற போர்வையில் பெறப்படும் ஆசிய அபிவிருத்தி வங்கியினதும் வட தென் கரையோர மீன்பிடித்திட்டம் மூலமான அபுதாபி நாட்டிலிருந்து பெறப்படுவதுமான உதவிகள் பாராமுகமாக முற்றுகத் தெற்குப் பிரதேசங்களிலேயே முடக்கப்படுகின் றன இந்நிலையில் கூட மொத்த மீன்பிடியில் ஏறத்தாழ பாதிப்பங்கிற்கு ஈழப்பகுதி வழங்கலைச் செய்கின்றது. பின்வரும் அட்டவணை மீன் பிடித் தலில் ஈழம் வகிக்கும் பங்கினைக் காட்டுகின்றது.

மீன் உற்பத்தி (தொன்)

| ஆண்டு | வடமாகாணம் | கிழக்கு மாகாணம் |
|---|---|---|
| 1953 | 9,000 | 3,100 |
| 1555 | 11,000 | 3,400 |
| 1960 | 20,650 | 4,900 |
| 1965 | 33,700 | 10,170 |
| 1969 | 39,400 | 31,520 |
| 1977 | 40,000 | 33.000 |



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இவ்வட்டவணையுடன் ஸ்ரீலங்காவின் மொத்த மீன் உற்பத்தியின் அளவினை ஒப்பிட்டு ஆராய்தல் முக்கியமாகும். 1953ல் 39,000 தொன்களாகவும் 1959ல் 1,37000 தொன்னுகவும் 1977ல் 1,73000 தொன்னுகவும் ஸ்ரீலங்காவின் மொத்த மீன்பிடி காணப்பட்டது. இதில் ஈழப்பகுதியின் பங்களிப்பு முறையே 12100, 70,920, 73000 தொன்களாகவும் காணப்பட்டது. ஈழப்பகுதிகளில் பிடிக்கப்படும் மீனில் 3ல் 2பங்கு ஈழத்திற்கப்பாலேயே நுகரப்படுகின்றது. மீதி 3ல்1பங்கு மாத்திரம் உடனடியாகவும், பதப்படுத்தப்பட்டும், கருவாடாகவும் உபயோகப்படுகின்றது. அடுத்து பெருமளவு அந்நியச் செலாவணியை ஈட்டித்தரும் இறால் பிடித்தலைப் பொறுத்தவரையில் ஈழப்பிரதேசத்தில் பிடிக்கப்படும் இறாலில் 5சதவீதம் மாத்திரமே ஈழத்தினுள் நுகரப்படுகிறது. மிகுதி 95 சதவீதம் ஏற்றுமதி செய்யப்படுவதாகவே கருதலாம். இவ் ஏற்றுமதிமூலமான வருமானத்தில் பெரும்பகுதி கூட்ட இடைத்தரகர்களாலேயே அனுபவிக்கப்படுகின்றது. ஈழத்தில் பிடிக்கப்படும் இறாலின் அளவு வருடமொன்றுக்குப் 10.000 தொன்களாக விளங்கும் அதே சமயம் இதன்மூலமாகப் பெறப்படும் அந்நியச் செலாவணி 500 மில்லியன் ரூபாய்களாக காணப்படுகின்றது.

இவற்றைவிட ஏனைய கடல்வளங்களாக விளங்கும் கடலட்டை, கடல்பாசி, சங்கு, சிங்கறல் போன்றவற்றுக்கு ஈழத்தின் வடபகுதி மிக முக்கியம் பெறுகின்றது. அதே போன்று ஸ்ரீலங்காவில் பிடிக்கப்படும் சுறாமீனின் 90சதவீதம் வடக்கிலேயே பிடிக்கப்படுகின்றது. சுறாவின் இறக்கைகள் (SHARK FINS) இன்று உலக சந்தையில் முக்கியத்துவம் வாய்ந்ததாகவும் பெரும் அந்நியச் செலாவணியை ஈட்டிக் கொடுப்பதாகவும் விளங்குகின்றது.

எனவே எமது வளத்தை நாம் சரியாகக் கணிக்காத நிலையில் எமது செல்வத்தின் பெரும்பகுதி சுரண்டப்படுவதை அறியாமல் அனுமதித்துக் கொண்டிருக்கிறேம். இன்று ஈழத்தில் இத்தொழிலில் நேரடியாக ஈடுபட்டவர்களது எண்ணிக்கை 137,600 ஆகவிளங்கும் அதேசமயம் காணப்படும் மீன்பிடி கிராமங்கள் 82,500 ஆக காணப்படுகின்றது. இவர்களது சமூக நிலைமை மாற்றியமைக்கப்படும் அபிவிருத்திக்கான திட்டங்கள் உருவாக்கப்பட்டால் மீன் பிடித்தலில் நாம் தன்னிறைவு பெறுவதுடன் மாத்திரமல்லாது பெருந்தொகை அந்நியச் செலாவணியையும் பெற்றுக்கொள்ளலாம். வங்காள விரிகுடா ஆராய்ச்சியின் பிரகாரம் மீன் பிடித்தலில் அதிக வசதிகள் நிறைந்த பகுதியாக வடபகுதி காணப்படுகின்றபோது இதற்கான எதுவித முயற்சியும் எடுக்கப்படவில்லை. இவ்வாறாக அதிக வருமானத்தை ஈட்டிக்கொடுக்கக் கூடியதுமான இறாலை முக்கியமாகக் கொண்டு வடக்கு பிரதேசத்தின்



மேற்கு கரையோரத்தில் இணைந்து முதலீடு செய்யும் முயற்சியில் பாக்கிஸ்தான் முயன்றதனை அரசு பாராமுகமாக ஒதுக்கியது. ஆழம் குறைந்த கடல் பிரதேசத்தையும் கற்பார் நிறைந்த கண்டமேடைகளையும் கொண்டுள்ள ஈழகடற்பகுதி மீன் பெருக்கத்திற்கு சிறப்பானதாகும்.

வளமும், வலுவும் வேண்டிய அளவு கிடைக்கும் போது தேவையான தொழில் நுட்பத்தினைப் பெறுவதோ அன்றி வெளிநாட்டு நுட்பத்தினைப் பெறுவதோ அன்றி வெளிநாடுகளுடனன் கூட்டு இணைப்புடன் தொழிலைப் பெருக்குவது சுலபமாக அமைந்துவிடும். அதாவது கடல் மீன் வளர்ப்பு, மீன்பிடித்தலுக்கான நவீனமுறை மீன்பிடிப்போரை ஊக்குவிக்கும் வகையிலான திட்டங்களை செயல்படுத்தல் வேண்டும். ஆழ்கடல் மீன்பிடித்தலை சர்வதேச ரீதியில் இணைந்து செய்வதின் மூலம் பெருமளவு பெருக்க முடியும். அதாவது எமது தேவையை பூர்த்தி செய்வதற்கும் ஏற்றுமதிக்கான மீன் பிடிக்கும் வகையில் எமது மீன்பிடி வளம் அமைந்திருப்பதனை நாம் உணர்தல் வேண்டும்.

தொடரும்

## ஒரு தோழனின் ஏக்கம்

நடுச்சாமத்தை
கோழிகள் கூவி முடித்து வைக்கும்
''தம்பி ஒரு முட்டக்கு''
''ஒரே ஒரு முட்க்குக் குடியன் ராசா''
கையில் தேத்தண்ணி ..................
கோப்பையுடன் அம்மா கெஞ்சுவாள்
அம்மாவின் கையால்
ஒரு உருண்டை சோறு உள்ளங்கையில்
வாங்கி உண்பதற்குத் தான்
எத்தனையோ மைல்கள் ..........
பதுங்கிப் பதுங்கி வந்திருப்போம்.
வற்றிப் போயிருக்கும் நாஉணர்வுகள்..........
புத்துணர்வுடன் உமிழ் நீர் சுரக்கத் தொடங்கும்..................
அம்மா அயலவர்க்கும்
அடுப்படிச்சத்தம் கேட்காமல்
சோற்றுக் குழையல் உருட்டுவாள்
இருளில் அவள் முகம் தெரியவே தெரியாது,
ஒரு குழையல் வாங்கியிருக்க மாட்டோம்..................
சர்......ர்ர்.........எனத் தெரு நாய்களின்
ஊளைகளை.........அதிரவைத்துக்கொண்டு



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வரும் ஜீப்சத்தங்கள்...........கேட்டு
நாங்கள்
உசாராகி
அடுப்படிப்படலைகளை உதைத்து
திறந்து கொண்டு ஒரேமூச்சில்
அகலக்கிணற்றைத் தாண்டி
அடிவளவிற்கு ஓடுவோம்.

''தம்பி ஒரு முடக்கு தேத்தண்ணியாவது
குடிச்சிட்டுப் போவன்...........தம்பி...........தம்பி
நாளைக்கு வா...........''
அம்மாவின் குரல்
தூரப் போய்க் கொண்டிருக்கும்.
பின்னர் மறைந்துவிடும்.
வள் வள் என...........என எம்முடனே ஓடிவரும்
வீட்டுநாய், அதற்கு பல நாட்களின் பின்
கண்ட சந்தோசம்
அது எங்களைக் காட்டி விடுமோ
என்று சூய்...........சூய் என விரட்டிக்கொண்டே
வேலியினை எகிறிப்பாய்ந்து
ஓடுவோம்...........
வயல்வெளி......................வரம்புகள்
என வித்தியாசம் தெரியாமல்
பாய்ந்து ஓடுவோம்......
இது எங்களுக்கு நன்ருகப்
பழகிப் போனது மற்ரெருநாள்.................
முன்பு
இப்படிச் சொல்லாமல் கொள்ளாமல்
ஓடுவதால் அம்மா அழுது
வீங்கிப் போவாள்...............
இப்போது இது
அவளுக்குப் பழகிப் போனது

பாடசாலையில் நாம்
படித்த நினைவில்
''நாடோடிகள்
வீடுகாணத்திரிவர்''......''
என அறிந்துவைத்திருந்தோம்.

ஆமாம்...............
நாங்களும் இன்றைய
நவீன நடோடிகள்தான்.
உஹூம்.................
எங்களுக்கு
அம்மாவின்
'ஒரு உருண்டைச்சோறு
கிடைத்திருக்காது'.



# ஒரு மாணவனின்
# டயறி

01-09-84 யாழ் பிரபல பாடசாலை ஒன்றின் மாணவர்கள் இராணுவத்தால் தாக்கப்பட்டதின் எதிரொலியாக மாணவர்கள் வடக்கில் பாடசாலைகளைப் பகிஸ்கரித்தனர். ஆசிரியர்கள் மட்டுமே வருகை தந்தனர்.

07-09-84 பருத்தித்துறை ஹாட்லிக்கல்லூரி தாக்கப்பட்டதையும் காங்கேசன்துறைப் பகுதி மாணவர்கள் ஆயுதப்படையினரால் தாக்கப்பட்டதையும் எதிர்த்து மாணவர்கள் பாடசாலைகளைப் பகிஸ்கரித்தனர்.

12-09-84 பருத்தித்துறையில் நடைபெற்ற சம்பவங்களைக் கண்டித்து தாய்மார்களும், மாணவர்களும் ஒரு நாள் உண்ணாவிரதம் இருந்தனர்.

04-10-84 யாழ் பல்கலைக்கழகத்தில் கல்வி கற்கும் சுமார் 100 ஹாட்லிக் கல்லூரி பழைய மாணவர்கள் ஹாட்லிக் கல்லூரிக்கு அருகே உள்ள பொலிஸ் அதிரடிப்படை முகாமை அகற்றுமாறு கோரி சைக்கிள் ஊர்வலம் ஒன்றைச் செய்தனர், இதில் ஹாட்லிக் கல்லூரி மாணவர்களுக்கு இப்போது கட்டிடங்களல்ல முக்கியம் படிப்புக்கு உத்தரவாதம் வேண்டும் என்றனர்.

10-10-84 வடபகுதியில் உள்ள பல பாடசாலை மாணவர்கள் பொலிஸ் நிலையத்தை அகற்றக் கோரி உண்ணாவிரதம் இருந்தனர்.

15-10-84 முல்லைத்தீவு பாடசாலைக்குள் இராணுவம் திடீர் சோதனை.

01-11-84 யாழ் பல்கலைக்கழக விஞ்ஞானபீட மாணவன் K. தேவகுமார் இராணுவத்தினரால் கொலை செய்யப்பட்டான்.

14-11-84 யாழ் வேம்படி மகளிர் பாடசாலை ஆசிரியை திருமதி தருமலிங்கம், திருமதி அரசரெட்ணம் ஆகியோர்மீதும் மாணவி தயாளினி நடராசா என்பவர் மீதும் இராணுவம் அசிற் வீசித் தாக்கியது.

06-12-84 தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி, யூனியன் கல்லூரி, வசாவிளான் மகாவித்தியாலயம் ஆகிய இடங்களில் க. பொ. த. (சாதாரண தரம்) பரீட்சை குழப்பப்பட்டது.

07-12-84 யாழ் செங்குந்தா இந்துக்கல்லூரியில் க. பொ. த. (சாதாரண தரப்) பரீட்சை (தமிழ் பாடம்) குழப்பப்பட்டது.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

08-12-84 வடக்கில் குழப்பப்பட்ட பரீட்சைகளுக்குபதில் மீண்டும் புதிய பரீட்சை நடக்கும் என்று கல்விப் பணிப்பாளர் கூறினர்.

12-12-84 வடக்கில் பல பாடசாலைகளில் க. பொ. த. (சா) தரப்பரீட்சை குழப்பப்பட்டது. கல்முனை இராமகிருஷ்ணமிசன் பாடசாலை கல்முனை பற்றிமாகல்லூரி, சிங்கள மகாவித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் க. பொ. த. (சா) தரப் பரீட்சை குழப்பப் பட்டது.

13-12-84 அக்கரைப்பற்றில் க. பொ. த. (சா) தரப் பரீட்சை குழப்பப் பட்டது.

14-12.84 அக்கரைப்பற்று மகாவித்தியாலய பரீட்சை நிலையத்தில் வைத்து 40 மாணவர்களைப் பொலீசார் கைது செய்தனர். இதில் 33 மாணவிகளும் 07 மாணவர்களுமாவர்.

21-12-84 யாழ் பல்கலைக்கழக விரிவுரையாளர் T. மகேஸ்வரனும், 20 மாணவர்களும் இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்டனர்.

24-12-84 யாழ் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தலைவர் திரு. சு. சிறிஸ்கந்தராசா இராணுவத்தினரால் முல்லைத் தீவில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்டார்.

25-12-84 அக்கரைப்பற்றில் கைது செய்யப்பட்ட மாணவர்கள் சகலரும் விடுதலை செய்யப்பட்டனர்.

04-01-85 யாழ் பல்கலைக்கழக மாணவன் இ. ரவிசேகர் இராணுவத் தினரால் கொலைசெய்யப்பட்டான்.

15-01-85 வங்காலை அன்னம்மாள் தேவாலயத்தில் வைத்து 15 வயது மாணவனுன மைக்கேல் நாதன் குரூஸ் இராணுவத்தால் சுட்டுக் கொல்லப்பட்டான்.

12-01-85 வடக்கு, கிழக்கில் நடைபெற இருக்கும் க. பொ. த.(சா) தரப் பரீட்சைக்கு 55000 மாணவர்கள் தோற்றுவார்கள் என்றும், இதுவும் குழப்பப்படுமாயின் எதிர்வரும் டிசம்பர்வரை வேறு எந்தப் பதில் பரீட்சையும் நடத்தப்படமாட்டாது என திணைக்கள ஆணையாளர் திரு. பி. காரியவசம் தெரிவித்துள்ளார்.

17-01-84 முல்லைத்தீவில் இராணுவத்தினரின் அட்டூழியத்தனங்களால் தங்களின் இருப்பிடங்களைவிட்டு மக்கள் கலைக்கப்பட்டதாலும் வந்தவர்கள் பாடசாலைகளில் தஞ்சம் புகுந்துள்ளதாலும் 24 பாடசாலைகள் நடைபெறாத நிலையில் உள்ளன. முல்லைத்தீவு பகுதியில் மொத்தம் 49 பாடசாலைகள் உள்ளன. இதில் 10 பாடசாலைகள் மக்கள் வெளியேறியுள்ள இடங்களில் உள்ளன.





பத்துத் தடவை கொள்ளைக்குட்படுத்தப்பட்ட தெல்லிப்பளை யூனியன் கல்லூரி மாணவர்களது எதிர்ப்புப் போராட்டம்.



வட்டக் கண்டல் ஆசிரியர்கள் தலைமையாசிரியர் சுட்டுக் கொலை செய்யப்பட்டதனையும் ஏனைய கொள்ளை நிகழ்ச்சிகளையும் கண்டித்து மாணவர்களது எதிர்ப்பு நடவடிக்கை

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மன்னூர், யாழ் சம்பவங்களைக் கண்டித்து அமெரிக்க ஹார்வாட் பல்கலைக்கழகத்தில் மாணவர்கள் ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடத்தினர்.

28-01-85 ஈழத்தமிழர் படுகொலையை எதிர்த்து ஈழவிடுதலை இயக்கங்களை (இணைத்து) மதுரையில் மாணவர் ஊர்வலம் ஒன்றை நடத்தினர். கடையடைப்பும், கல்லூரிகள் மூடப்பட்டும் எதிர்ப்புணர்வு வெளிக்காட்டப்பட்டது

29-01-85 வடக்கு, கிழக்கிற்கு புதிதாக க. பொ, த. (சா) தரப் பரீட்சை நடத்த வேண்டும் என தமிழர் ஆசிரியர் சங்கம் பரீட்சை ஆணையாளரிடம் கேட்டுள்ளது. கடந்த டிசம்பர் பரீட்சை ரத்து செய்யப்படவேண்டும் எனக்கோரின.

''சகல மாணவர்க்கும் சமநீதி வழங்கப்பட வேண்டுமானுல் முழுப்பரீட்சையும் புதிதாக நடைபெறுவது அவசியம் என்றும் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

02-02-85 யாழ் இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கம் ''கல்வி வளர்ச்சிக்கு அவசியமானவற்றை சேதப்படுத்துவது வேதனையளிப்பதாகவும் இழப்பினை மீண்டும் பெறமுடியாது'' அவற்றைத் திருப்பிக் கொடுக்கும்படி அறிக்கை விட்டுள்ளனர்.

03-02-85 மாணவர்களது ஒரே சொத்து கல்வி. அதில் மண்ணை அள்ளிப் போடாதீர்கள் என ஐக்கிய மாணவர் பேரவையும் அனைத்து மாணவர் ஸ்தாபனமும் சுவரொட்டிகள்மூலம் தெரிவித்துள்ளது. இன்றைய மாணவர்கள் நாளைய மக்களே அவர்களது எதிர்காலத்தை பாழாக்காதீர், என விளித்தன.

04-03-85 யாழ் மாணவர் பிரதிநிதிக் குழு கண்டனம்.

''எந்த நிலையில் பரீட்சை நடந்தாலும் நாம் நிராகரிக்கலாகாது. கடந்த டிசம்பர் மாதம் நடந்த க. பொ. த. (சா)தரப் பரீட்சையைப் குழப்பியது விசர்த்தனமான வேலை என வன்மையாகக் கண்டிக்கிறோம், எமது சந்ததியினரை புத்தி ஜீவிகள் என்ற நிலைக்கப்பால் தள்ளவேண்டாம்'' என்ற கருத்தை கூறினர்.

08-02-85 மட்டக்களப்பு மெதடிஸ்ட் மத்திய கல்லூரி மாணவன் கைதாகி விடுதலை செய்யப்பட்டான்.

11-02-85 மலையக மாணவர்களை யாழ் பல்கலைக்கழகத்தில் இருந்து கொழும்புக்கும், பேராதேனியாவுக்கும் மாற்றும்படி இ. தொ. கா. ஜனுதிபதியை கேட்டுள்ளது. சுமுகமான நிலை ஏற்படும் வரை இவ்வாருன நடவடிக்கை வேண்டும் எனவும் கோரியுள்ளது.



12-02-85 தமிழ் மாணவர் முன்னணி கண்டனத்தில்.

''மாணவர் கல்வியில் கைவையாதீர். டிசம்பர் க. பொ. த (சா) தரப் பரீட்சை குழப்பப்பட்டது வருந்தத்தக்கது. நாளைய தலைமுறை இன்று கல்வி கற்கிறது. கல்லூரி உபகரணங்களைக் கொள்ளையடிப்பதும், விஞ்ஞான பூர்வமற்ற கண்ணேட்டத்தில் பரீட்சையைக் குழப்புவதும் கண்டிக்கப்படவேண்டும் என கூறப்பட்டது.

16-02-85 மன்னூர் வட்டக்கண்டல், அமெரிக்க மிஷன் கலவன் பாடசாலை அதிபர் உட்பட மூன்று ஆசிரியர்கள் இராணுவத்தினரின் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியானதைக் கண்டித்து யாழ் மாவட்டத்தில் (50,000) பாடசாலை மாணவர்கள் சுலோக அட்டைகளைத் தாங்கி ஆர்ப்பாட்டம் நடத்தினர். வட்மாநில கல்விப் பணிப்பாளரிடம் மகஜர் கையளிக்கப்பட்டது. சுருக்கம் பின்வருமாறு:-

சுடப்பட்ட ஆசிரியர்கள்:-

1. திரு. சுந்தரமூர்த்தி 2. திரு. மகேந்திரன்
3. திரு. இரட்ணதுரை

△ ஆசிரியைகள் மானபங்கப்படுத்தப்பட்டனர்.

△ அடம்பன் மகாவித்தியாலம். ஆள்காட்டிவெளி அமெரிக்கன் மிஷன் கல்லூரி, கருங்கண்டல் ரோமன் கத்தோலிக்கக் கல்லூரி, வண்டக்கண்டல் மகா வித்தியாலயம் ஆகியன இன்று இயக்க முடியாத நிலையில் உள்ளன.

19-02-85 யாழ் பல்கலைக்கழக மாணவன் றெக்ஸ்யோகராஜா வவுனியாவில் வைத்து இராணுவத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

20-02-85 யாழ் மாணவர் பிரதிநிதிகள் முல்லைத்தீவில் உள்ள அகதிகளுக்கு வழங்குவதற்கென நிதி, உடைகள் என்பன பொது மக்களிடமிருந்து சேகரித்து அகதிகள் புனர்வாழ்வுக் கழகத்தினரிடம் ஒப்படைத்தனர்.

21-02-85 யாழ் பல்கலைக்கழக மாணவர்கள்

''பாடசாலைகள் மீதும் உயர்கல்வி நிறுவனங்கள் மீதும் நடத்தப்படும் கொள்ளைகள், நாசகாரச் செயல்களைக் கண்டித்தும் க. பொ. த. (சா)தரப் பரீட்சையைக் குழப்பவேண்டாம் எனவும் கேட்டுள்ளனர்.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பயங்கரவாதி

ஆறில்லை
யாழ் ஊற்றெடுக்கிறது
நீராய் இல்லை
செந்நீராய் தார்மீகச்சுனையில்
பள்ளி செல்கையிலே
பாதிவழியில் சுடப்பட்டான்
பயங்கரவாதி பட்டம் பெற்றான்
கங்குல் மருங்கையிலே
கவசாக்கியில் தங்கையுடன் விரைகையிலே
காக்கிச் சட்டைகள்
சுடுகையிலே
பயங்கரவாதி அவனானான்
அந்தி மயங்கும் நேரம்
ஆகாரத்துடன் ஆஸ்பத்திரி
செல்கையிலே
விரைவாய் வந்த வீணனவனின்
குண்டு தந்தையவன்
தலையைத் தடவிச் சென்றது
பயங்கரவாதி அவனானான்
அதிகாலை வேளையது
கிராமம் உறங்கையிலே
சுற்றிவளைக்கிறது
காக்கிகள்
பதை பதைத்து எழும் கிராமம்
செய்வதறியாது திணறுகிறது சிறுசுகள்
திகைக்கும் பெரிசுகள்
கிழடுகளும் கூட
நாளை............பயங்கரவாதிகள் கைது
சிறுசுகள் கிழடுகள் இவர்கள்தான்
பயங்கரவாதிகள்
பாசிச வாத தேசிய வாதத்தின்
குரல்கள் இவைதாம்
ஈழவருக்கு இந்த நிலைதானோ?
இல்லை
ஈழவர் நிலை மாறும்
மாற வேண்டும்
அதற்கு நம் கைகளுக்கு வேண்டும்
கருவிகள் நாங்கள் கருவிகள் ஏந்துவோம்
அதில் வரைவோம் வீரகாவியம்.









தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## சுமைகள்

(சிறுகதை)

பெரிய கிளாக்கர் மவன், கண்டக்கு ஐயா மவன் எல்லோரும் டவுனு பள்ளிக்கூடத்தில படிக்கிருங்க, எனக்கும் பள்ளிக்கூடக்திலே சேரணும் நல்லா படிக்கணும். நல்ல உத்தியோகமா பார்த்து ஆயா அப்பாவுக்கு உழைச்சுப் போடணும். இப்படிங்கிறதில் பெரிய ஆசை தான். அப்படி டவுனு பள்ளிக்கூடத்தில எல்லாம் படிக்கிறத்துக்கு நான் என்ன கிளாக்கர், கண்டக்கு ஐயா இவுங்கவூட்டுப் புள்ளேயா? நானு தோர்ட்டத்தில வேலே செய்யிறவுங்கவூட்டுப் புள்ளதானே.

நாங்க எல்லாமா அஞ்சு புள்ளேங்க. ஆயாவும், அப்பாவும் தான் தோட்டத்தில வேல. அவங்க ஒழைக்கிற சம்பளத்துலதான் எல்லோருமா சாப்பிடணும். அதோட மற்றைய செலவுகளெல்லாம் அதுக்குள்ளதான். தோட்டத்துல என்ன சம்பளத்த கொட்டியா கொடுக்கிருங்க. மாசம் பூரா வேலே செய்கிற ஆயாவும், அப்பாவும் எடுக்கிற மொத்த சம்பளமே முன்நூறுக்குள்ளதான் வரும். இந்த சம்பளதில நானு டவுனு பள்ளிக்கூடத்தில போயி படிக்கிறதெல்லாம் எப்படி சரிவரும்.

அப்ப எனக்கு அஞ்சுவயசிருக்கும் எங்க தோட்டத்தில இருந்த என்னோட ஒத்த சப்பாணி, சிவனு, இராமநாதன், எல்லோரும் தோட்டத்துப் பள்ளிக்கூடத்தல படிக்க ஆசைப்பட்டோம். இத நான் ஆயாக் கிட்டவும் சொன்னன், ஆயாவுக்கு என்ன பள்ளிக்கூடதில போட ஆசதான். நானும் படிச்சி கண்டக்கு கணக்குப்புள்ள வேலே செய்ய னுங்கிறதில ஆயாவுக்கு ஆசதான். இருந்தும் ''நீ பள்ளிக்கூடத்துக்கு போயிட்டா தம்பிபயலே யாரடா பார்த்துக் கொள்ளறது'' அப்ப டின்னு ஆயா சொல்லிறுச்சி. ஆயா சென்னதும் நிசந்தான் எல்லோரும் வேலேக்குப் போயிட்டா அம்பிப்பயலே பாக்கிறதுக்கு ஆளு இல்ல. ஒரு வயசு கூட அவனுக்கு ஆகல்ல. அத்துடன் ஆயாவுக்கும், அப்பாவுக்கும் மலேக்கு தேத்தண்ணி கொண்டு போக வேற ஆளும் இல்ல இதெல்லாம் யோசிச்சி பார்த்துத்தான் பள்ளிக்கூடத்துக்கு போறது பத்தி ஆயாகிட்ட் கரைச்சல் கொடுக்கல்ல.

லயத்தில நாகையா வாத்தியாரு ராப் பள்ளிக்கூடம் நடத்திருை நாளேக்கு நாலு பேரு முன்னிலேயில் நம்ப புள்ள விரலேயா நீட்டிக் கிட்டிருக்கிறது. இப்படின்னு ஆயா நெனேச்சு என்டா மணி நாளேயிலிருந்து நீ அந்த நாகையா வாத்தியார்கிட்ட போயிட்டு படி அப்



பிடின்னு சொல்லிச்சு. எனக்கு ஒரே சந்தோசம், மறுநாள் சிலேட் பென்சிலுடன் வாத்தியார்கிட்ட படிக்கப் போய்ட்டன். பின்னேரம் ஆறு மணிக்கு ஆரம்பிச்சு இரவு ஒன்பது மணிக்கெல்லாம் பள்ளிக்கூடம் முடிஞ்சிடும். தோட்டத்தில் உள்ள வயசுக்கு வந்தவங்ககூட நாகையம் வாத்தியார் கிட்டத்தான் படிச்சாங்க இரண்டு வருஷம் மட்டுல அவருர கிட்டத்தான் படிச்சன். அப்பதான் நாகையா வாத்தியாரு மணிய நம்ப தோட்டத்து பள்ளிக்கூடத்திலயாவது சேர்த்துவிடுங்க. நல்லாப் படிக்கிற பையன், படிச்சிடுவான் அப்படின்னு ஆயாகிட்ட றெக்கமண்ட் பண்ணிருை அடுத்த கிழமையே ஆயா என்ன கூட்டிட்டு போய் தோட்டத்து பள்ளிக்கூடத்துல சேர்த்துச்சு.

பள்ளிக்கூடம்னு டவுன்ல இருக்கிறமாதிரி பெரிய பில்டிங்கில்ல. ஆறு தூண்களுடன் மேலே கூரையும் சேர்ந்த சின்ன மண்டபம். இதற்கு முந்தி ''பிள்ளக்காம்ரா'' என்றுதான் சொல்லுவார்கள். அந்தக்காலத்தில வெள்ளக்கார தொரமாரு கட்டினதுன்னு ஆளுங்க பெருமைப்படுவாங்க. கோப்பிக்காலத்தில் சின்னப்புள்ளங்க தோட்டத்துல உள்ள கோப்பி பழத்த எல்லாம் புடுங்கி தின்னுபுடுங்களாம். இதப்பாத்துக்கிட்ட வெள்ளக்காறத் தொர தோட்டத்த காத்துக்க வழி கண்டு பிடிச்சாராம். தோட்டடத்துல எல்லாப் புள்ளங்களேயும் புடிச்சு ஒரு இடத்துல அடச்சு போட்டு பூட்டுறதுதான் அந்த வழியாம். அப்புடி கட்டப்பட்ட மறியல் தான் இன்னிக்கு தோட்டத்து பள்ளிக்கூடம்னு பேர்ல இருக்குது.

அந்த தோட்டத்து பள்ளிக்கூடத்தில மொத்தமா நூறு புள்ளங்க மட்டுல படிக்கும். ஒரேயொரு வாத்தியாருதான் இருந்தாரு. வாத்தியாரு தமிழும் கணக்கும் மட்டும்தான் படிச்சிக்கொடுத்தாரு. வாத்தியாரு குடும்பத்தோட அங்கதான் இருந்தாரு. ஏளெட்டு மாட்டோட பள்ளிக்கூடத்துக் காணியில தோட்டமும் வைச்சிருந்தாரு. பள்ளிக்கூடத்து புள்ளங்கதான் காய்கறித் தோட்டத்தில வேலே செய்வாங்க. அடிக்கடி வாத்தியாரு எங்கள பாத்து சொல்லுவாரு, நீங்கெல்லாம் படிச்சி என்னடா கண்டக்கு, கணக்குப்புள்ள வேலேயா செய்யப் போறிங்க?

பள்ளிக்கூட நேரம் காலே எட்டு மணிதான் எண்டாலும் பத்து மணிக்கு பொறகுதான் படிக்கிற வழக்கம். நானும் சப்பாணியும் காலேல போனதும் மாட்டுப் பட்டிய கூட்டி துப்புரவு செய்வம். அப்புறமா நாட்டு மலேத்தொங்கலுக்கு போய்ட்டு மாட்டுக்கு புல்லு அறுத்துக்கிட்டு வருவம். இந்த வேலேயெல்லாம் செய்து முடிக்க பத்து மணியாகிவிடும். இதற்கு அப்புறம் தான் படிப்பு.

ஒரு வருசத்துக்கு ஒரு முறை சோதனேக்காக டவுன்ல இருந்து இன்ஸ்பெட்டர் வருவாரு. அன்னேக்கு பள்ளிக்கூட சுவரெல்லாம்



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வெள்ளையடிச்சி சுத்தம் செய்வோம். அன்னிக்கு ஏக தடல் புடலா வாத்தியாரு வீட்டில் சமையல் நடக்கும். சோதனக்காரரு வந்ததுக்கு ஏதோ ரெண்டு கேள்வி கேட்பாரு, அப்புறம் வாத்தியாரு வீட்டு விருந்துல கலந்துகிட்டு போயிடுவாரு- எதுதுன்னுலும் வருஷா வருஷம் நாங்க வகுப்பேத்தப்படுவம்.

ஒரு முறை நாங்கல்லாம் முடிவுக்கு வந்தோம். இனிமே வாத்தியாரு தோட்டத்துல வேலை செய்கிறதில்ல. மாட்டுப்பட்டிய கூட்டுறதில்ல, புல்லறுக்க போறதில்ல அப்படின்னு இது வாத்தியாருக்கு தெரிஞ்சு போச்சு தடியோட வந்த அவரு ''தோட்டக்காட்டு நாய்களா உங்க-ளுக்கு கொழுப்பு கூடிப்போச்சு'' அப்படின்னு அடி அடின்னு அடிச்சு தோல உரிச்சுப்போட்டாரு.

எப்படியோ நான் அஞ்சாம் வகுப்பு எட்டிப் புடிச்சநேரம் தோட்ட-ங்களை கவர்மென்டு எடுப்பதாக பேச்சு நடந்திச்சு எங்க தோட்டத்தை-யும் கவர்மென்டு எடுத்து துண்டு துண்டால் பிரிச்சி நாட்டுல உள்ள சிங்களவர்களுக்கு குடுத்திட்டாங்க அதோட பள்ளிக் கூடத்த மூடிப் போட்டாங்க, வாத்தியார வேற பள்ளிக்கூடத்துக்கு மாத்திப் புட்டாங்க நான் ஏந்த டவுன் பள்ளிக்கூடத்துக்கு, எப்படி போறது?

---

வெறும் வன்செயல் எதையும் தராது. எல்லாவற்றையும் அழித் தொழிப்பதாகத்தான் முடியும். பொலிசாருடனும் இராணுவத்தினருடனும் மோதப்படாது. அவர்கள் வெறும் கருவிகள். வெறும் போலிப் புகழ்ச்சி-யால் உந்தப்பட்டுச்செல்பவர்கள். அவர்களுடைய துர்ப்பாக்கியம் எப்பொழுதும் தீயசக்திகளின் எடுபிடிகளாகச் செயல்பட வேண்டிய நிலை. நாங்கள் கண்மூடித்தனமாக அவர்களைத் தாக்கினுல் அவர்கள் பிரிக்க முடியாதவாறு தீயசக்திகளுடன் ஒன்றிப் போய் விடுவார்கள். அவர்களுடைய கண்கள் மூடிகிடக்கின்றன. இவர்களை அப்படியே வைத்துக் கொண்டு கண்களைத் திறந்து விட வேண்டும். அது தான் கெட்டித்தனம்.

---

நன்றி : லங்கா ராணி.



## ஒரு கடிதம்..................ஒரு கடிதம்..................ஒரு கடிதம்

*அன்பின் நண்ப!*

உனது சுகம் எப்படி. நான் நலம் நீ உனது நாட்டினைப் பற்றி விபரமாக எழுதி இருந்தாய். நன்ருக இருந்தது. இம்முறை நான் எழுதப்போகும் இந்த விடயங்களால் எனது கடிதம் உனது கைக்கு வந்து சேருமோ தெரியவில்லை. ஆதலால் எனது விலாசத்தை மறைத்துள்ளேன்.

ஆயுத பாணிகளான இராணுவத்தினரும், இடைக்கிடை ஆயுதம் தரிக்கும் இயக்கம் இளைஞர்களதும் புரியாத சில நடவடிக்கைக்குட்படுத்தப்பட்ட நிலையில் நாங்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்ருேம். எமது கல்வி பெருமளவு சீரழிந்து செல்வதுடன் இனிமேல் கடந்த காலத்தில் நாங்கள் கண்ட கல்விமான்கள் உருவாக மாட்டார்களா என்ருெரு ஐயப்பாடும் காணப்படுகிறது.

சென்ற கடிதத்தில் நான் எனது வகுப்பு நண்பர்களுடன் சேர்ந்து எடுத்துக்கொண்ட புகைப்படம் ஒன்றை அனுப்பியிருந்தேன். அதில் எனக்கு அடுத்து வலது பக்கத்தில் இருந்த மூன்று நண்பர்களும் வீதியால் சென்று கொண்டிருந்த சமயம் ஒரு இயக்கத்தைச் சார்ந்தவர்கள் துண்டுப் பிரசுரத்தை விநியோகித்தார்கள். இதனை வாங்கி வாசித்துக் கொண்டிருக்கையில் ரோந்து வந்த இராணுவத்தால் கைது செய்யப்பட்டனர். பின்னர் இராணுவ வதை முகாமுக்கு கொண்டு செல்லப்பட்டு பலத்த சித்திரவதைகளுக்கு உள்ளாக்கப்பட்டனர். இவர்களை கைது செய்து அழைத்து செல்லும் போது '' வரேங் மஸ் கடேட்ட'' [இறைச்சிக் கடைக்கு வாங்கடா] என்று கூறினராம். இவர்களை பிணை எடுக்கச் சென்றவர்கள் எதுவித த்கவலையும் அறிய முடியாமல் திரும்பி விட்டார்கள். திரும்பியவர்கள் கண்ட காட்சிகளின்படி இறைச்சிக் கடையில் இறைச்சி தொங்குவது போன்றே பலர் நிர்வாணமாக இடையிடையே தோலுரிக்கப்பட்டும், காயங்களுக்குட்பட்டும், சுடுநீர், நெருப்பு என்பவற்ருல் சூட்டுக்குள்ளான நிலையிலும் தலைகீழாக தொங்க விடப்பட்டுள்ளதாகக் கூறினர்.

எனது இடது பக்கத்தில் காணப்பட்ட மூவருள் இருவர் திடீரென தொடர்ந்து பாடசாலைக்கு வருவதினை நிறுத்திவிட்டார்கள். விசாரித்ததில் ஆயுதப்பயிற்சிக்கு செல்வதாக கடிதம் ஒன்றினை எழுதி வைத்து



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

விட்டு சென்று விட்டதாக அவர்களது பெற்ருேர் அழுத வண்ணம் கூறினர். இங்கு முக்கியம் என்னவென்ருல் இந்த இருவரும் தாம் எந்த இயக்கத்திற்கு எதற்கு போகிருேம் என்று அறியாத நிலையில் சென்ற னரோ அதே போன்றே போராட்டத்தில் அனைவரும் ஈடுபட வேண்டும் என்பதனை அறியாத நிலையில் பெற்ருேரும் உள்ளனர்.

மேலும் பாடசாலையில் வகுப்புக்கள் நடைபெறும் போது சில சமயங்களில் சிலர் மோட்டார் சைக்கிளில் வந்து இறங்குவார்கள். சக மாணவர்கள் வாய் ''இயக்கம்'' ''இயக்கம்'' என முணுமுணுக்கும் அதிபருடன் கதைப்பார்கள் அவர் முகம் பயத்தினுல்கறுத்துவிடும். எமது பாடங்கள் இடை நிறுத்தப்படும். வந்தவர்கள் வகுப்பினுள்,தமது கருத் துகள், கொள்கைகள்,தமிழீழம் சோசலிசம்,என பலவாருக விளக்குவார் கள். ஆனுல் எங்கள் எல்லோரது கவனமும் வந்தவர்கள் வைத்திருக்கும் பைகளிலேயே தங்கியிருக்கும். கடைசியில் பையில் இருப்பதனை எடுத்து எங்களுக்கு காட்டுவார்கள். உனக்கு இந்தப்பொருள் என்னவென்று விளங்கியிருக்கும் என நினைக்கிறேன் இதனைக் காட்டித் தருபவர்களுக்கு இருபதினுயிரம் ரூபாய் வெகுமதி தருவதாக ரூபவாஹினியில் காட்டப் படுகிறது.

எல்லாவற்றிற்கும் மேலாக பாடசாலைப் பொருட்கள், சம்பளப் பணங் கள் என்பன தொடர்ந்து கொள்ளையடிக்கப்பட்டு வருகின்றன. போர்க் காலத்தில் சர்வாதிகாரி ஹிட்லர் கூட இப்படிச் செய்யவில்லை என எனது அப்பா அடிக்கடி கூறுவார். நான் என்ன செய்யலாம், தொடர்ந்து இந்த சூழ்நிலையில் படிப்பதா அல்லது வெளிநாடு சென்று படிப்பினைத் தொடர்வதா,அல்லது இயக்கம் ஒன்றுடன் இணைந்து படிப்பைக் குழப்பு வதா, அல்லது படித்துக் கொண்டேபோராடுவதா எதுவும்புரியவில்லை. குழம்பிய நிலையில் இருக்கிறேன். இந்த நிலையில் எனக்கு உனது அறிவுரை அவசியம். பதில் தேவை

இப்படிக்கு
**உனது நண்பன்**

பி.கு:

அப்பா அடிக்கடி விளக்கமில்லாததுகள் ஆயுதம் ஏந்தினுல் இப்படி த்தான் எனக் கூறுவார். நான் விளக்கம் கேட்டால் ''வாயை மூடிக் கொண்டுசும்மா கிடஎன்பார். இதுவும் எனக்கு விளங்கவில்லை.



# ஒரு இளம் ஆசிரியையின் பார்வையில்

ஒரு நாட்டின் அறிவு மிக்க பரம்பரை தான் அந்நாட்டின் ஒளிவிளக்கு எனலாம். ஒளி இன்றேல் இருளில் தான் தடுமாற நேரிடும். பல காலம் இருளில் தட்டுத்தடுமாறி வாழ்வதைவிடச் சிலகாலம் வாழ்ந்தாலும் ஒளியில் வாழ்வது தான் உண்மையான வாழ்வாகும். அத்தகைய ஒளி விளக்கு போன்றகல்வி ஆயிரம் காலத்துப் பயிர். இது சிறுபிராயம் தொட்டே தடைகள் எதுவுமின்றி வளர்க்கப்படல் வேண்டும். ''இளமையிற்கல்'' ''இளமையிற்கல்வி சிலையில் எழுத்து'' என்று நம் ஆன்ருேர் வற்புறுத்தியதும் அதற்கு சான்று பகரும். இன்றைய சிருர் தான் எதிர்கால சமுதாயத்தை உருவாக்கும் சிற்பிகள். நாட்டை நாட்டு மக்களை வழி நடத்த வேண்டியவர்களும் அவர்களே. இவர்கள் தம்மைத் தயார் செய்யும் பாதை தடைகள் இன்றிப் பேணப்பட்டால் தான் எதிர்காலம் சிறப்பாக அமையும். இன்றுள்ள மாணவர்களது பாதை சீராகச் செல்வதற்குப் பதிலாக நிச்சயமற்ற ஒரு வளைபாதை யாக இருப்பதினை எம்மால் அவதானிக்க முடிகிறது. நாளை என்ன நடக்கும்? என்ற கேள்விக் குறியுடன் மக்கள் வாழும் இக்காலகட்டத்தில் எமது கல்வியின் நிலை என்ன? என்று அங்கலாய்க்கும் மாணவர் சமுதா யத்தையும் அவர்களது எதிர்காலத்தை நிச்சயமற்று நோக்கும் பெற்ருே ரையும் காணும்போது கல்வி பாதிக்கப்படும் நிலமையை யாரும் விரும்ப மாட்டார்கள். இதை அனுமதிக்க முடியாது என்ற முடிவுக்கு எல்லோரும் ஒன்று சேர்ந்து வரவேண்டியுள்ளது.

அரச பயங்கரவாதத்தின் எதிரொலியாகப் பொருளாதாரம் ஸ்தம் பிக்கும், ஸ்த்திரமற்ற வாழ்க்கைநிலை இவை காரணமாக மக்களுடைய அன்ருட வாழ்க்கை பாதிப்புற்றுக் காணப்படுகிறது. மாணவர்களும் இதற்கு விதிவிலக்கல்ல.

போக்குவரத்துச் சீர்கேடு, எங்கோ கேட்கும் வெடிச்சத்தம், வீதியில் ஓடும் வாகனங்களின் வேகம். வீதிவழியாகச் செல்லும்போது கவச வாகனத்தில் எப்பொழுதும் நீட்டிய வண்ணம் காணப்படும் துப்பாக்கி களோடு, ரோந்து செல்லும் இராணுவ வீரர்களின் படை வாகனங்கள் எதிர்ப்பட்டவுடன் மக்கள் எங்கு பதுங்குவது, எங்கு ஓடுவது எங்கே தப்பித்துக்கொள்ளுவது எனபரபரப்புடன் சிதறி ஓடும் காட்சி, இவற்ருல் நிலை குலைந்து நடுங்கும் மாணவர். அவர்களின் பெற்ருேர் பிள்ளைகளின் உயிர் வீட்டில் இருந்தால் பாதுகாப்பாக இருக்கும் என்று ஏங்கும் பாச உணர்வு, நாம் வீடு போய்ச் சேருவோமோ, என்று தவிக்கும் மாணவ இதயங்கள், மாணவர்களை வீட்டுக்குப் பாதுகாப்பாக அனுப்புவது



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எப்படி என்று தவிக்கும் ஆசிரியர்களின் கடமையுணர்வு, இவை இன்றைய கல்விமுறையில் அன்றாடம் இடம்பெறும் நிகழ்ச்சிகளாக அமைந்துள்ளது எமது துரதிஷ்டமே.

அது மட்டுமா? திட்டமிடப்படாத சில காரணங்களுக்காக ஏற்கனவே பூரணமாக அறிவிக்கப்படாத, பாதி அறிவித்தும் அறிவிக்கப்படாத நிலையில் திடீரென் பாடசாலைகளையும் சிலரின் பகிஷ்கரிப்பு என்ற போர்வையில் மாணவரைத் திருப்பி அனுப்பி வைக்கும் செயல் ஆகியவற்றால் இன்று குறிப்பாக எமது மாணவர்களது கல்வி பாதிக்கப்பட்டுக் காணப்படுவதுடன், ஒழுங்கும் சீர்குலைகிறது. இதே நிலைமை தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருக்குமானால், கல்வியை தமது மூலதனமாகக் கொண்டு சிறந்த கல்விமான்களை உருவாக்கிய எமது சமுதாயம் எதிர் காலத்தில் பேதைகள் நிறைந்த புத்திஜீவிகளற்ற சமுதாயமாக உலக அரங்கில் தலைகுனிந்து நிற்கும் புறக்கணிக்கப்பட்ட சமுதாயமாக மாறும் நிலைதான் உருவாகும். இதைத் தடுத்து நிறுத்தி மாணவர்களது கல்வி பாதுகாக்கப்படவேண்டியது மிக அவசியம்.

தமது நோக்கத்தை குறுக்கு வழியில் நிறைவேற்றுவதற்காக மாணவர்களது கல்வியை குழப்ப நினைக்கும் கும்பலை இனங்கண்டு கொண்டு அவர்களை மக்கள்மத்தியில் இருந்து அகற்ற முழுச்சமுதாயமுமே முன் வர வேண்டும். பாடசாலைகளைக் குழப்புதல், மாணவர்களைத் தடுத்தல் பரீட்சைகளைக் குழப்புதல் போன்ற செயல்களை இல்லாது ஒழிக்க சகலரும் முன்வரவேண்டும். இயக்கம் என்ற போர்வையில் கல்வி குழப்பப்படுமானால் அறிவற்ற பரம்பரையைத்தான் அவர்கள்தமது சமுதாயத்தில் வாழ அனுமதிக்கிறார்கள், பேதைகளுக்கு விடுதலையின் புனிதத்தன்மை, மகத்துவம் என்பன விளங்குமா? விலைமதிப்பற்ற உயிர்த்தியாகங்கள், இரத்தச் சிந்தல்கள், உடமை இழப்புகள் எல்லாம் ஒரு அறிவற்ற மூட்பரம்பரையினருக்காகவா? உரிய வயது வரும்வரை விரும்பிக் கல்விகற்க செல்பவருள் எம்மவருள் எத்தனை நபர்? இந்த நிலையில் நாம் இடைவெளியில் திசைத்திருப்பப் படுவோமானால் பயனற்ற எதிர்காலச் சமுதாயமாக மாறும் நிலை ஏற்படும். இதனால் மாணவர்களாகிய நீங்கள் ஏகோபித்து இத்தடைகளை வென்று அறிவை வளர்த்து சமுதாயத்திற்கு உங்களால் இயன்ற தொண்டைச் செய்வோமென்று உறுதி கொள்ளுங்கள்.



## யார் உரிமை கோருவீர்

26-04-84 மட்டக்களப்பு பல்கலைக்கழகக் கல்லூரியில் 122000 ரூபா கொள்ளையடிக்கப்பட்டது.

01-04-84 யாழ் தொழில்நுட்பக் கல்லூரியில் சீசன்ரிக்கட் பணம் 18-774 ரூபா கொள்ளையடிக்கப்பட்டது.

15-09-84 யாழ் கல்வி திணைக்களத்தில் பல பெறுமதியான பொருட்கள் கொள்ளையடிக்கப்பட்டன.

24-12-84 மட்டக்களப்பு ஆரையம்பதி மகாவித்தியாலய சம்பளப் பணம் கொள்ளையடிக்கப்பட்டது.

31-12-84 யாழ் சென்ஜோண்ஸ் கல்லூரியில் இரண்டு டெக்குகள் கொள்ளையடிக்கப்பட்டன.

20-01-85 யாழ் இந்துக் கல்லூரியின் கதவு, யன்னல், அலுமாரி என்பன சேதமாக்கப்பட்டு, தொலைக்காட்சிப் பெட்டி, கம்பியூட்டர் இயந்திரம், பெருமளவு ரோணியோ காகிதங்கள் ரொக்கப் பணம் 3,000 ரூபா, இரசாயன கூடத்திலும் பெறுமதியான பொருட்கள் என்பன துப்பாக்கி முனையில் இளைஞர்களால் கொள்ளையடிக்கப்பட்டன.

வட்டுக்கோட்டை தொழில்நுட்பக்கல்லூரியில் வாயுமூலம் வெட்டுக் கருவி (Gas Cutters) உட்பட பல பொருட்கள் கொள்ளையடிக்கப்பட்டன.

10-01-85 மானிப்பாய் கோவில்பற்று பாடசாலை ஒன்றில் புகுந்த இனந் தெரியாத வாலிபர்கள் அதிபரின் மூக்குக் கண்ணாடியைச் சேதப்படுத்தியதுடன் அவரை அச்சுறுத்தி, மாணவர்களின் வழிபாட்டிற்கென இருந்த சரஸ்வதி பட்த்தையும் எடுத்துச் சென்றனர்.

20-02-85 யாழ் தொழில் நுட்பக்கல்லூரியில் (கொக்குவில்) ஜெனரேற்றர், துப்பாக்கிக் குண்டுகள் துளைக்கமுடியாத கெட்டியர்ன தகரங்கள், தட்டச்சு இயந்திரங்கள் வெல்டிங் இயந்திரம் ஆகியன கொள்ளையடிக்கப்பட்டன.

21-02-85 யாழ் சென் பற்றிக்ஸ் கல்லூரியில் இரண்டு லட்சம் ரூபா பணம் கொள்ளையடிக்கப்பட்டது.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




## அறிமுகமாகிருர்

### தோழர்களே!

இந்த இதழிலிருந்து ஒரு முகமறியா மாணவர் உங்களோடேயே வாழ்ந்துகொண்டு உங்களால் தான் பெற்ற அனுபவங்களை, இந்தச் சமூகத்தின் அவலங்களை, இதனுல் எதிர்காலத்தின் இளைய சமுதாயம் எவ்வாறு பாதிக்கப்படப் போகின்றது. இதிலிருந்து நாம் எப்படி மீளலாம். என்பது போன்ற விடயங்களில் உங்களோடு தொடர்ந்து உரையாடுவார் இந்த நேரத்தில் அவரைப்பற்றிய அறிமுகமும் அவரின் பின்னணியும் உங்களுக்குத் தேவைதான்.

மகாகவி பாரதி வாழ்ந்த வேளையில் அவரை இகழ்ந்த அத்தனைபேருமே இன்று அதே கவிஞனுக்கு சிலைகட்டி வழிபடுகின்றனர். இப்படியான ஒரு காலங்கடந்த ஞானேதய உணர்வு மிகுந்தது எம் சமூகம் இன்று நாம் 'குட்டானின் ஆய்வுகளைத்.தரமுன் குட்டானை அறிமுகம் செய்து வைக்கையிலே முகத்தைச் சுளிக்கும் நீங்கள்தான் எதிர்காலத்தில் (AFTER THE EELAM REVOLUTION) ''குட்டானின் மழலைநிலையும் மாணவ வீரமும்'' என்பது போன்ற ஒரு மண்ணுங்கட்டித் தலையங்கத்தின் கீழ் ஆய்வு செய்து ஒட்டி சுட்டான் வளாகத்தில் ''கலாநிதி பட்டம் பெறப் போகிறீர்கள்.

### குட்டானின் சரிதை

குட்டானின் சிறுபிராயம் இன்றைய வாழ்வு போல் விறுவிறுப்பானதில்லை யென்ருலும் ஒரு மாமனிதனின் வாழ்வின் அடித்தளங்கள் அவைதான். குட்டானுக்குச் சொந்த ஊர் யாழ்நகரின் ஒரு கோடியிலுள்ள வழமையான காய்ஞ்ச ஊர்தான். ஆனுல் இவ்வூர் ''வளங்கொழிக்கும் மூதூர்'' என அந்தியேட்டிக் கல்வெட்டுகள் கூறுவதை நீங்கள் மேற்கோள் காட்டின் ''காக்கைக்கும் தன்குஞ்சு பொன்குஞ்சு'' எனும் முதுமொழி உங்களுக்குத் தெரியாதென்றே அர்த்தம். பெற்ருேரின் பெயர் பற்றியும் அறிவது உங்கள் PhDக்கு உதவும் தான். ஆனுல் குட்டானின் பெற்ருேர் இடுபெயர்களை விடவும் அடைமொழிப் பெயரான ''உடையார்'' என்று சொல்வதைத்தான் அதிகம் விரும்புவர், இந்த விடயத்திலாவது நாம் குட்டானின் பெற்ருேருக்கு உதவுவோமாக. ''இந்த உடையார் குடும்பச் சிறப்பைச் சீரழிக்கத்தான் இந்த மூதேவி வந்து பிறந்தான்'' ஓங்கித் தலையிலொரு குட்டுக் கொடுத்து இக் கண்டுபிடிப்பை உடையார் 31-12-73ந் தேதி வெளியிட்டார். அப்போது குட்டானுக்கு வயது ஆறே ஆறுதான். இந்த முடிவுக்கு வர அவர் கண்ட குட்டானின் செய்கைகள்.

△ ''உடையாருக்கான உடனடித் தென்னங்கள்ளைக் கொடுக்க வந்த வைரவன் குடிக்கத் தண்ணி கேட்டபோது செம்போடு தண்ணியைக் கொடுத்தது.

△ பாத்திகட்ட வந்த பரமசிவத்தை மாமா என்று கூப்பிட்டு ''நயினர்'' நாகரிகத்தை காற்றில் பறக்க விட்டமை.

செல்வன் குட்டான் இவரது இயற்பெயர் ரவிகுலதிலகனுகவோ வேலுப்பிள்ளையாகவோ இருக்கலாம். ஆனுல் அதுபற்றி ஆராய்வதால் எப்பயனும் இல்லை. ஏனெனில் பெற்ருேர் இட்ட அத் திருநாமத்தால் அவரை யாருமே அழைத்தோ அழைப்பதோ கிடையாது.

''குட்டான்'' 2ம் பராக்கிரமபாகு, 3ம் குலோத்துங்கசோழன் போன்ற மன்னவப் பெருந்தகைகட்கு பசியால் வாடிய அப்பாவி புலவர்கள் அன்ருடம் காலந்தள்ள பணந்தருவான் என்ற நம்பிக்கையில் வழங்கிய அற்பத்தனமான கங்கை கொண்டான்'', ''சோனுடு கொண்டான்'' போன்ற பெயர்கள் போன்றதல்ல. உடையார் பிள்ளையார்சுழிபோட்டுத் தொடக்கி வைத்த குட்டல் பின் குட்டான் மக்கள் புரட்சி என்று அலட்டி அதற்காகவே வாழ்வு என்று உறுதியோடு வெயில் வழிய அலைந்து திரிந்ததாலும், அநீதிகள் கண்டு பொங்கிச் சீறுவதாலும் சக பொதுஜனங்களும் இவர் தலையில் அடிக்கடி ஓங்கிக் குட்டி ''மொக்குப்பொடியன்'' என்றும்'' வேலையற்ற வெங்கிணுந்தி''என்று சக மாணவரும் குட்டிக் குட்டி காலகதியில் இவர் குட்டானுய்ப் போனுர்.

இப்படியான மொக்கு வேலைகளைக்கண்ட உடையாரின் குட்டான் மீதான எரிச்சலோ குட்டான் வளர்ந்த வேகத்தைவிட வேகமாக வளர்ந்து விட்டது. இது குட்டானின் துரதிர்ஷ்டமோ அதிஷ்டமோ என்பது கூட எதிர்காலத்தில் உங்கள் ஆய்வுக்குரிய விடயமாக நிச்சயம் மாறும். நம் கதாநாயகன் O/L. சோதனையைதன் 16 வயதிலே வழமை போல் சுமாராக எழுதி முடித்ததும் ஊர்ப் பக்கம் இயக்கங்களும் தலைகாட்டத் தொடங்க உதறலெடுத்தது உடையாருக்கு. உடனடியாக ''சென்னை மாநகரில் உயர் கல்வி கற்று இனிமேலாவது உருப்படு'' என்று ஆசீர்வதித்து ஊரைவிட்டு துரத்திவிட்டார்.

(ஆனுல் குட்டானுக்கு அப்போதே சில புரட்சித் தொடர்புகளிலிருந்ததை எந்த எதிர்ப்புரட்சி வாதியாலும் கண்டுபிடிக்க முடியவில்லை.)





தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

''கங்கையில் மூழ்கினலும் காக்கை அன்னமாகாதாம்'' சென்னை வந்து உயர்கல்வி பெற்ருலும் குட்டு வாங்கும் கெட்ட பழக்கம் ஊஹூம்... ...மக்கள் இவரை மன்னிக்கவே தயாரில்லை. பாவம் குட்டான். ஆனல் ஊர் சுற்றி வேலையை குட்டான் கைவிட் ஒருநாளும் யோசித்ததே கிடையாது. வழமைபோல் இன்றும் குட்டான் அவரது மதிய போசனத்தை முடித்துக் கொண்டு நண்பரொருவரைப் பார்க்க வென்று, போகின்ருர் ஒரு பெரியவர் கதவினைத் திறக்கின்ருர்.

பெரியவர் ;- வாரும் தம்பி......இரும்......இரும்.இவன் தம்பி தங்கன் எங்கையோ போட்டார். நான் அவற்றை அப்பாவின்ரை friend நான் பழைய (ஒரு பத்திரிகையின் பெயர்) HEAD EDITOR ஆக இருந்தனன். பிறகு இப்ப இப்ப தம்பி அவங்கள் தமிழருக்கெதிராய் பயங்கரமாய் எழுதுருங்கள், அதாலை நான் விலகி விட்டேன்.

[இவரது தமிழ்ப்பற்றுக்கண்டு குட்டானுக்கு மெய் சிலிக் கிறது]

பெரி:- (தொடர்கிருர்) அதுசரி தம்பி நீர் CEYLON தானே. இங்கை படிக்கிறீரோ? அல்லது இயக்கம் கியக்கமோ?

குட்:- சீச் சீ......அப்படியொண்டுமில்லை. நான் ஒரு மாணவர் அமைப்பிலைதானிருக்கிறன் இதுகள் எங்கடை அமைப் போடை வெளியீடுகள்.

பெரி:- [''ஈழவர் இடர் தீர'' என்ற அப்புத்தகத்தை வாங்கி மேலோட்டமாகப் படிக்கின்ருர்] தம்பி.....நீங்கள் ஏன் ஈழம் ஈழவர் என்று சொல்லுறியள்? என்ன காரணம்? ஈழம், ஈழவர் என்ற சொல்களுக்கு என்ன விளக்கமென்டு தெரியுமே?

குட்:- ஈழம் என்ற பிரதேசமானது சுயநிர்ணய உரிமை கோரிப் போராடும் தமிழ்மொழி பேசும் தேசிய இனத்துக்கு எதிர் காலத்தில் போராட்ட வெற்றி மூலம் கிடைக்கப்போகும், இத்தேசிய இனத்தின் பாரம்பரியப் பிரதேசங்களாகும். சிங்கள மக்களுக்குச் சொந்தமான அத்தேசிய இனத்தின் பாரம்பரிய பிரதேசங்களை மட்டுமே ஸ்ரீலங்கா என்ற நாடாகுமென நாங்கள் கருதுகின்ருேம். இந்தப் புத்தகத் திலே இருக்கிற ''ஈழவரும் ஈழக் கோரிக்கையும்'' அதை ஒருக்கா வாசிச்சீங்கண்டா எல்லாம் விளங்கும்-
(குறித்த கட்டுரையை வாசித்தபின்)

குட்டானின் பக்கங்கள்

பெரி:- ஓய்......தம்பி...... என்னை ஆரெண்டு நினைக்கிறீர் நான் 43 வருஷங்களாக பத்திரிகைத் துறையில் தான் இருக்கிறன்.

குட்:- ஓமோம்........அதுக்கென்ன பெரியவர் இப்ப?

பெரி:- என்ன பகிடியே விடுகிறீர்
ஈழம் என்ருல் இலங்கையின்ரை இன்னெரு பெயர். ஈழவர் என்ருல் மலபாரிலுள்ள மரமேறிகள். தெரியுமோ? தம்பி...... உம்மடை தலைவர்களிட்டம் போய்ச் சொல்லும். அவைக்குச் சிலவேளை விளங்கும்''சிறுபிள்ளை வேளாமை தம்பி வீடுவந்து சேராது'' நான் ஒருபோதும் உதை ஏற்கமாட்டேன். எங்க ளுக்காகத்தானே போராடுவதாகச் சொல்லுறியள் (எகத்தா ளமாக) உடனடியாக உதை மாற்றச் சொல்லும். நாங்கள் மரமேறிகள் இல்லைக் கண்டீரோ.

குட்:- [அஞ்சும் கெட்டு அறிவும் கெட்டு] சரி........ பெரியவர் நான் போயிட்டு வாறன். கட்டாயம் நான் போய்ச் சொல்லுறன்.

பெரி:- நீங்க வேணுமென்டால் மரமேறுங்கோ கும்பிட்டன் எங்களை ஏறவையாதயுங்கோ.

*ஆய்வுக்குப்பின் குட்டானின் அறிக்கை*

திரு- பெரியவர் அவர்களின் பேச்சுகளும் சரி வேண்டுதல்களும் சரி அவருடைய இயல்புகளால் மட்டும் எழுபவையல்ல. எமது சமூகத்தில் ஆயிரம் பெரியவர்கள் இதே மனேபாவத்துடன் வாழ்ந்து வருகின்ருர்கள் இந்தப் பெரியவர்கூட ஒரு சாதிக்கொடுமையை இலக்கிடங்களில் தந்த ஒரு முற்போக்கு எழுத்தாளரைத் தான்தான் வளர்த்து விட்டதாகக் கூறினுர். ஆக இவர்கள் நடைமுறை வேடதாரிகள் என்பது நிதர்சனமா கின்றது. ஆகவே இவர்களைப்பற்றி நாம் அதிகமாகக் கவலைப்படத் தேவை யில்லை, இன்னும் ஈழவர், ஈழம் சம்பந்தமாக யாருக்காவது குழப்பங்கள் உண்டெனில் ''ஈழவர் இடர் தீர'' என்ற எமது வெளியீட்டின் முதலாவது கட்டுரையான ''ஈழவரும் ஈழக்கோரிக்கையும்'' என்பதனை நீங்கள் படிக்கலாம்.

**மாணவத் தோழர்களே !**

*நாங்கள் எங்கு நிற்கின்ருேம் ?*
*எம் சமுகம் எங்கு நிற்கின்றது ?*
*இவ்வேளையிலே எமது பணி என்ன ?*

குட்டானின் பக்கங்கள்

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இப்படித்தான்
நீ
படித்துக்கொண்டிருப்பாய்
அல்லது
கிணற்றடியில் ஊத்தை விலக்கி
வாளி நீரை அனுபவித்து
வார்த்துக் கொண்டிருப்பாய்
அப்போது
படார் என
உந்தித் தள்ளி விழுத்தி
உன்னிடம் பறக்கப் பறக்க
ஓடி வருவான்
மேல் மூச்சு கீழ்மூச்சு வாங்க
அந்தச் செய்தியைக் கூறுவான்
உன்னிடம்- நீ
அதிர்ந்து கிணற்றுக்கட்டில்
சாய்ந்து விடுவாய்
உனக்குப் பழகிப் போன
சமாச்சாரம் தான்
முன் வீட்டிலும்
பக்கத்து வீட்டிலும்
நாட்களின் முன்னர்
என் நேற்றே
நடத்திருக்கலாம்
உன் அண்ணன்
வீதியில்
குருதியில் நனைந்து கிடப்பான்
ஓநாய்கள் சுட்டிருப்பார்கள்
தலை நனைந்து
மண் பட்டிருக்கும்
புன்னகை மறையாது
உதட்டில் உறைந்திருக்கும்
அண்ணனின் தலை, மார்பு இப்படி
சன்னங்கள் துளைத்திருக்கும்
உனது அண்ணனின்
வீரம் சுரக்கும் மார்பில்
அம்மா கவலை சுரக்க
தலை வைத்து
அழுது கொண்டிருப்பாள்
அருகில்
அக்காளும் தங்கைகளும்
விம்மி, விம்மி சிவந்து
ஊர் கூடி நின்று
சோகத்துடன் பார்ப்பார்கள்
இது நடந்த பின்
உன்னைக்காணவே கிடைக்காது
எப்போதாவது
தாயைக்காண நீ
நடுநிசியில் வந்து
போனதாகச்
சிலர் கதைப்பார்கள்

க. சோமேஸ்வரன் எமது அமைப்பின் வளர்ச்சிக்கு முன்னின்று உழைத்தவர்களுள் முக்கியமானவன். அமைப்பு வேலையாக செல்கையில் 5-1-1935 அன்று இராணுவத்தால் சுட்டு வீழ்த்தப்பட்டான். சோமேஸ் உனக்கு எமது வீரவணக்கங்கள்

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்